பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 121 13—10—1995
இதழ்: 20 விலை ரூபா 5-00

ஒக்ரோபர் 23ஆம் திகதி—திங்கட்கிழமை

## சேனையாளருக்கான ஞான ஒடுக்கம்

★ மறைக்கல்வி நிலையத்தில்

எதிர்வரும் ஒக்ரோபர் 23ஆம் திகதி திங்கட்கிழமை, யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த சகல மரியாயின் சேனை பிரசீடியங்களின் அங்கத்தினர்களுக்கான வருடாந்த ஒரு நாள் ஞான ஒடுக்கம் மறைக் கல்விநிலையத்தில் அருள்தந்தையர் J. E. ஜெயசீலன், R. சூசைநாதன் அவர்களால் நெறிப்படுத்தப்படும். காலை 9 மணிக்குத் தொடங்கும் இந்நிகழ்வுக்கு சகல சேனையாளரையும் தவறாது சமுகமளிக்குமாறு கொமிற்சியத் தலைவர் M. A. பிரகாசராஜா அவர்கள் கேட்டுக்கொள்கின்றார்.

❊ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ❊

ஐ. நா. பொதுச்சபையில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்

# சுதந்திரத்திற்கான மனிதனின் ஏக்கம் அடக்கி ஒடுக்கப்பட முடியாதது

(The Quest for Freedom Cannot Be Suppressed)

**"சுதந்திரத்திற்கான மனிதனின் ஏக்கம் அடக்கி ஒடுக்கப்படமுடியாதது. சுதந்திரத்திற்கான ஏக்கம் நாடுகளையும் தனிமனிதர்களையும் தன்னில் கொண்டுள்ளது. நாடுகளின் உரிமைகள் மீறப்பட்டதாலேயே 2ஆம் உலகப்போர் இடம்பெற்றது.... தற்போதும் தனி மனிதர்களும், நாடுகளும் சுதந்திரமாய் வாழ்வதற்கான உரிமைக்குரல் எழுப்பப்பட்டு வருகின்றது."**

கடந்த வியாழன் –5.10.95 – அன்று ஐ. நா. நிறுவனத்தின் 50வது ஆண்டு நிறைவையொட்டி நியூயோர்க்கிலுள்ள இப் பன்னாட்டு நிறுவனத்தில் இடம் பெற்ற ஐ.நா. பொதுச் சபை அமர்வில் சிறப்புரையாற்றுகையில் திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் மேற்கண்டவாறு கூறினார்.

அண்மைக்கால நிகழ்வுகளைக் காணும்போது, உலகம் இன்னும் வேறுபாடுகளுடன் வாழக் கற்றுக்கொள்ளவில்லையென்று தெரிகிறது. மற்றவர்கள் நம்மிலும் வித்தியாசமானவர்கள் என்பதை ஏற்க மறுக்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## ஆயர் வியன்னி பெர்னான்டோ செயற்குழுவில் நியமனம்

நடக்கவிருக்கும் ஆசிய ஆயர்களின் மன்ற சிறப்புப் பேரவையின் ஆயத்த மன்ற ஒன்றியத்தினது பொதுச் செயற்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் மேதகு வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை பரிசுத்த தந்தையினால் நியமனம்செய்யப்பட்டுள்ளார். இச்செய்தி செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட வத்திக்கான் உத்தியோகபூர்வமான இதழான "ஒப்சேர்வாட்டோ றோமானோ"வில் வெளியிடப்பட்டுள்ளது.

## பொதுநிலையினரின் பொற்காலத்திற்கான மறையியல் கல்லூரி ஆரம்பம்

அறிவியல் விரிவடைந்து வரும் நவீன உலகிலே, மறையியல் வளர்ச்சி அத்தியாவசியமானதுடன், வாழ்க்கை ஞானமுமாக அமையவேண்டுமென யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மறையியல் கல்லூரி (Tamil Theologate) தொடக்க விழாவில் பிரதம விருந்தினராய்க் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்.

7-10-95சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு மறையியல் கல்லூரி இயக்குநர் அருள் கலாநிதி S. J. இம்மானுவேல் ஒப்புக்கொடுத்த திருப்பலியு


(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின்

## குருத்துவ வெள்ளி விழா

புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருள்திரு. A. I. பேர்ணாட் அவர்களின் குருத்துவ வெள்ளிவிழாவை 19.10.95இல் பத்திரிசிய குடும்பம் பெருமகிழ்வுடன் கொண்டாடுகின்றது.

11-06-46இல் பிறந்த இவர் புனித சாள்ஸ் பாடசாலையிலும், புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்வியைக் கற்று, குரு மாணவனாக 1963-69 வரை தனது மெய்யியல், இறையியல் கல்வியை இந்தியாவின் பூனாவில் உள்ள பாப்பரசர் குருத்துவக் கல்லூரியில் கற்றுத்தேறி



19-10-1970இல் இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டார். 1974-81 வரை

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## குருநகர் "இதயம்" மீண்டும் துடிக்கின்றது

இருவருடங்களுக்கு முன், 13.11.93 அன்று விமானக் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்ட குருநகர் புனித யாகப்பர்ஆலயம்புனரமைக்கப் பெற்று கடந்த 07.10.95 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திரும்பவும் புனிதமாக்கப்பட்ட திருநிகழ்வு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் நடாத்தப்பட்டது. ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய யாழ் ஆயர் அப்பங்கின் சிறார்களுக்கு புதுநன்மையும் வழங்கினார்.

திருப்பலியைத் தொடர்ந்து இடம்பெற்ற சேவை நயப்பு வைபவத்தில் பங்குத்தந்தை R.M.G. நேசநாயகம் அடிகளார் புனரமைப்புப் பணியில் உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன், ஆலய திருத்த வேலையின் மேற்பார்வையாளர், பணியாளர் யாவருக்கும் சிறப்பு விருதுகளும் பரிசில்களும் கொடுத்துக் கௌரவித்தார்.

## மானிப்பாயில் வெள்ளிவிழாத் திருப்பலி

தற்பொழுது கிளிநொச்சி மறைக் கோட்டத்தில் பணிபுரியும் முன்னைநாள் மானிப்பாய் மறைக்கோட்ட முதல்வர் அருள்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் தமது குருத்துவ திருநிலைப் படுத்தலின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இறைவனுக்கு

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## யாழ் பொதுநிலை சபையின் 60ஆம் ஆண்டு விழா

60ஆவது ஆண்டுபூர்த்தியை நினைவு கூர்ந்து நிறைவேற்றிய கூட்டுத் திருப்பலியில் தலைமை தாங்கி மறையுரையாற்றிய யாழ் ஆயர், அசிசியாரைப் போன்று யேசுவிலும் தேவதாயாரிலும் 3ஆம் பிரான்சிஸ்கன் சபையினர் பக்தி உடையவர்களாக விளங்கி, இப் போர்க்கால சூழலுக்கேற்ப, ஆன்மீக மனித

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## குருத்துவக் கல்லூரி 16வது கல்வியாண்டு

புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக்கல்லூரியின் 1995-96ஆம் கல்வியாண்டின் தொடக்கவிழா நிகழ்வுகள் இம்மாதம் 2ஆந்திகதி இடம் பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினரான இக்கல்லூரியின் காப்பாளரும் வேந்தருமாகிய யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம்பெற்றது. பின்னர் கல்லூரியின் பிரதான மண்டபத்திலே கல்லூரி

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## நவாயூர் நாடகக் களப்பயிற்சி

இயல், இசை, நாடகம் கலையின் கண்கள் இவற்றை கிறிஸ்தவ விழுமியங்களுடன் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் இயங்கி வரும் திருமறைக் கலாமன்றத்தினால் 01-10-95 ஞாயிறு அன்று நாவாயூர் பங்குத்தந்தை அருள்திரு பேணாட் ரெக்நோ அவர்களின் பரிந்துரைக்கிணங்க நாடகக் களப்பயிற்சி ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தது.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## நாகர்கோவில் மக்களுக்கு உதவி

நாகர்கோவிலில் தம் பிள்ளைகளை இழந்து, தம் உறவினரின் காயங்களைக் கண்டு கலங்கிக்கொண்டிருந்த மக்களின் கண்ணீரைத் துடைக்க யாழ். மனிதமுன்னேற்ற நடுநிலைய இயக்குனர் S. H. ஜெபநேசன் அடிகளாரின் அன்புக் கரம், இராணுவத்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)



ஆயர் திருநிலைப்படுத்தலின்
3ஆம் ஆண்டு நிறைவு
20–10–1995

மன்னார் ஆயர்
இராயப்பு
ஞானானந்தர் யோசவ்
ஆண்டகை
அவர்களுக்கு
அன்பு வாழ்த்துக்கள்

## எம்கருத்து

# "ஆட்களைத் திரட்டும் வாரம்"

எதிர்வரும் ஒக்ரோபர் 22ஆம் திகதி அன்று மறை பரப்பு ஞாயிறு கொண்டாடப்படுகின்றது. அந்நாளைத் தொடர்ந்து வரும் வாரம் யாழ் மறைமாவட்டத்தில் தேவ அழைத்தல் வாரமாக கொண்டாட தலத்திருச்சபையின் குருக்கள் – துறவியர் – குருமாணவர்க்கான ஆணைக்குழு அழைப்பு விடுக்கின்றது. இறைவனின் பணியைப் புரிய ஆட்கள் பற்றாக் குறையை நிவர்த்திசெய்ய மக்களின் உள்ளத்தில் விழிப் புணர்வு ஏற்படுத்தும் நோக்கோடு இவ்வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன் நம் மண்ணில் காலடி எடுத்து வைத்து, நம் முன்னோரின் விசுவாசத்தைப் பேணிக்காக்கவும், உறுதிப்படுத்தி வளப் படுத்தவும் அரும்பணிகளாற்றிய வண.யோசேவ் வாஸ் அடிகளார் முத்திப் பேறு நிலைக்கு உயர்த்தப்பட்ட இவ்வாண்டில் இறைபணிக்கு 'ஆட்களைத் திரட்டும்' புனித முயற்சி மேற்கொள்ளப்படுவது மிகவும் பொருத்தமானதும் போற்றுதற்குரியதுமாகும். திருச்சபையின் நீண்ட வரலாற்றில் இறைவன் எப்படி பலவீனரைப் பயனுள்ள, பலமுள்ள, அருள்பாய்ச்சும் கருவிகளாக மாற்றியுள்ளார் என்பதற்கு முத்திப்பேறுபெற்ற யோசேவ் வாஸ் சிறந்ததோர் எடுத்துக்காட்டாவார்.

தேவ அழைத்தல் இறைவன் தரும் ஒரு கொடை. இறைவன் தன் மீட்புப் பணியைத் தொடர்ந்து செய்ய வான தூதர்களை அழைக்காமல், பலவீனமுள்ள மண்ணின் மக்களை அழைக்கின்றார். உலகத்தின் முன் பலவீனமானதை இறைவன் தன் பணிக்காகத் தேர்ந்து கொள்கிறார். இப்பலவீனமானவர்களில்தான் இறைவனது வல்லமை முழுமையாக வெளிப்படும்.

நெருக்கடியும் ஆபத்துக்களும் நிறைந்த இக்கால கட்டத்திலும்கூட இறைவனின் பணியை ஏற்க இறைவன் ஏராளமான மக்களைத் தூண்டுகிறார். இறைவனின் ஏவுதலை இளைஞர்களும் யுவதிகளும் ஏற்க முன்வரவேண்டும். இக்கருத்துக்காக அனைவரும் செபிக்கவேண்டும். ''அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ குறைவு'' என்று சுட்டிக்காட்டிய நம் ஆண்டவர் கிறிஸ்து இப்பிரச்சனைக்கான தீர்வு வழிமுறையையும் கொடுத்துள்ளார். ''அறுவடைக்குவேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்'' (லூக். 10:2) என்கிறார்.

கத்தோலிக்க குடும்பங்கள் 'தேவ அழைத்தல், என்ற பிரச்சனையைக் கரிசனையுடன் நோக்க வேண்டும். இப் பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதற்காக செபிப்பதுடன், நலன்களுக்கெல்லாம் ஊற்றாகிய இறைவனுடன் ஒத்துழைக்கவேண்டும்.

இறையுணர்வு மிக்க கத்தோலிக்க குடும்பங்கள் தான் தேவ அழைத்தலின் ஊற்று. அங்கேதான் தேவ அழைத்தலுக்கான வித்து பயிரிடப்படுகின்றது. இவ் வித்து முளைத்து தழைத்தோங்குவதற்கான நல்ல விளைச்சல் நிலமாக குடும்பங்கள் இருக்கவேண்டும். இறையன்பிலும் கிறிஸ்தவ புண்ணியங்களிலும் ஊறித் திளைத்த குடும்பங்கள்தான் தேவ அழைத்தலின் நாற்றங்காலாயிருந்து தேவ அழைத்தலை வளர்க்கமுடியும்.

தேவ அழைத்தலை விரும்பி ஏற்போரின் எண்ணிக்கைக் குறைவு எமது பிரச்சனையின் ஒரு பகுதியென்றால், விரும்பியேற்றவர் விலகிப்போதல் இப் பிரச்சனையின் மற்றொரு பகுதியாகும்.

தேவ அழைத்தல் இன்றைய உலகில் பல சிக்கல்களைக் கொண்டுள்ளது. குருமடங்களும், பயிற்சியகங்களும் காரசாரமான சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றன. இவற்றில் அளிக்கப்படும் பயிற்சிகள் தரம் சிற்சில வேளைகளில் விமர்சனத்திற்குமுள்ளாகின்றது. இன்றைய குருமடங்களில் தரப்படும் அறிவுப் பயிற்சி எவ்வளவுக்கு உயர்ந்திருந்தாலும், அங்கு கொடுக்கப்படும் ஆன்ம இயல் பயிற்சியின் தன்மையில்தான் அவற்றின் உயர்தரம் எடைபோடப்படுகின்றது.

மேலும், துறவற வாழ்வை விரும்பி ஆர்வமுடன் ஏற்பவர்கள் நாளடைவில் இறை ஆர்வம் குறைந்து பின்னோக்கிப் போகும் மனநிலையை உருவாக்குவதில் பல சூழ்ச்சிகள் முனைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவற்றிற்கெதிராகக் கிறிஸ்தவர்கள் போரிட வேண்டியவராகின்றனர்.

எனவே, இறைவனின் அழைப்பையேற்று அவருக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் தாங்கள் தேர்ந்துகொண்ட அர்ப்பண வாழ்வில் இறைவனுக்கும், இறைமக்களுக்கும் பிரமாணிக்கமாயிருக்க வேண்டுமெனவும், இவர்கள் நாளுக்குநாள் அர்ச்சிப்புப் பெறும்படியும் அறுவடையின் ஆண்டவரை மன்றாடுவோமாக!

# கிறிஸ்தவத்தின் நிழல்கள்

★ J. E. ஜெயசீலன் அடிகளார்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கொஸ்மஸ் ஒரு துறவியான பின் லத்தீன்மொழியில் அவர் எழுதிய நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் —

"தாம்ரபரணியிலும் (தாம்ரபரணி, இலங்கையை முன்னர் அழைத்த பெயர்) ஒரு தேவாலயம். அங்கு குடியேறிய பாரசீகக் கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமானதாய் அமைந்துள்ளது. அங்கு பாரசீகத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ள குருவும் ஒருவரும் கிரிகைகளும் நடைபெறுகின்றன. மகலீனா கிறிஸ்தவனாளான், இவனால் கிறிஸ்தவ சின்னங்கள் படைத்த தங்கக்காசுகள் வழக்கத்திலிருந்தன எனவும் கூறப்படுகின்றது.

ஆனந்த சுரவீர என்னும் 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிக்கு ஒருவர் எழுதிய சிகிரியாவின் கதை என்ற ஏட்டிலிருந்து எடுக்கப்பட்ட இத் தகவல் எவ்வளவு உண்மையானது என நிரூபிக்க முடியாவிடினும், கேரள பல்லவ நாட்டிற்கும், இலங்கைக்கும் இருந்த பரஸ்பர தொடர்பை இது சுட்டிக்காட்டுகின்றது. இது தொடர்பாக அண்மையில் கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராச்சியில் கண்டெடுக்கப்பட்ட வெள்ளிக்காசுகளில் இரண்டினைக் கவனிக்கலாம்.

ஒன்றில் வெறும் சிலுவை போன்ற கீறலும், மற்றதில் வட்டத்தினுள் கீழத்தேய முறையில் அலங்கரிக்கப்பட்ட சிலுவை போன்ற ஒன்றும் கீழ் பிராந்தியிலும் வடமொழியிலும் 'பழைய காசு' என்று அர்த்தம்பெறும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

அது கிறிஸ்தவ சிலுவைச் சின்னத்தை கொண்டிருக்கிறதென்றும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த 4ஆம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் புழக்கத்திலிருந்த வணிகக்குழுக்களின் 'காசு' என்றும் குறிப்பிடுகின்றனர்.

மேற்காசியாவுடன் இலங்கை கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகளையும் தென் இந்தியாவிலே 10ஆம் நூற்றாண்டுக்கு முன் கிறிஸ்தவம் அறியப்பட்டிருக்கின்றது என்பதையும் கருத்திற் கொண்டு கவனிக்குமிடத்து அநுராதபுரத்துச்சிலுவையும், கொஸ்மஸ் தரும் சான்றும் இலங்கையில் ஆதிகாலத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்திருந்தனர் எனக்கொள்வது பிழையாகாது. இலங்கையில் வர்த்தகர்கள் மூலமே 'இஸ்லாம்' சமயமும் மேற்காசியாவிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் இங்கு பரவியது என்பது தெளிவு. அவ்வாறே ஏற்கனவே கிறிஸ்தவமும் பரவி

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

அநுரதபுரத்தில் (1912/13-ம் ஆண்டுகளில்) அகழ்வாராச்சி நடைபெற்றபொழுது திரு. எட்வேட் எயர்ட்டன் என்பவர் ஒரு பழைய தூணின் உடைந்த பாகம் ஒன்றைக் கண்டுபிடித்தார். அதில் ஒரு கிறிஸ்தவ சிலுவை படைப்புச் சிற்பமாய் செதுக்கப்பட்டிருந்தது. இது அனுராதபுர இராசதானிக்காலத்தைச் சேர்ந்ததாகவும் இதன் காலம் 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனவும், எனவே இக்காலப் பகுதியிலே கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்களென்றும் கொஸ்மசின் கணிப்பை இச்சிலுவை நிரூபிக்கின்றது. அதுவுமன்றி தென் இந்தியாவில் தமிழ் நாட்டில் கண்டெடுக்கப்பட்ட சிலுவை அடையாளங்களும் எகிப்திலும், மேற்காசியாவிலுமுள்ள பழமை வாய்ந்த கொப்டிக் தேவாலயங்களில் காணப்படும் சிலுவைகளும், அநுராதபுரத்தில் காணப்படும் சிலுவைக்கு ஒத்ததாக அமைந்துள்ளமையும் அறியப்படுகின்றது. – (கலாநிதி கே. இந்திரபாலா 'நண்பன் ஏடு' யாழ். பல்கலைக்கழகம்)

1972இல் பேராசிரியர் பரணவிதாரண 'காசியப்பமெகலான I அரசனது இராணுவத்தில் (473 - 508) கேரள கிறிஸ்தவர்கள் உயர் அதிகாரிகளாக பதவி வகித்தனர் என குறிப்பிடுகின்றார். இவர்கள் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டு பின்னர் மீள திரும்பிய பொழுது அமைக்கப்பட்ட இராணுவ பிரிவில் மிகாரா என்ற கிறிஸ்தவ அதிகாரி இருந்தார். என்று தெரியவருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் அரசன்

## நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவை

06. உதவியாய் இரு, ஆனால் உபத்திரவமாய் இராதே.
07. அமைதியாய் இரு, ஆனால் ஆத்திரப் படாதே.
08. பின் வருவதை முன் அறிந்து செயற்படு.
09. பேசுவது வெள்ளியைப் போன்றதானால், பேசாமல் இருப்பது தங்கத்தைப் போன்றது.
10. உன்னுடைய பேச்சை மருந்தைப் போன்று பாவனை செய்.

(வளரும்)

ஆக்கம்; க. அருள்நேசன்

## இளைஞர் ஆணைக்குழு

அறிமுகப்படுத்துகின்றோம்: 4

# மணற்காடு புனித அந்தோனியார் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்

பாதுகாவலர்: புனித அந்தோனியார்

விருது வாக்கு: "கிறிஸ்தவ இளைஞர்களாக உருவாக..."

நோக்கம்: இளைஞர்களிடையே ஒன்றிப்பை வளர்ப்பதும், அவர்களது பொது அறிவை வளர்ப்பதும், சமய சமூகப் பணிகளில் ஈடுபடுதலும்.

தலைவர்: யேசுதாஸ் கமலதாஸ்

ஒன்றியவிழா: தொழிலாளர் தினமான வைகாசி–01

அங்கத்தவர் எண்ணிக்கை: 24

கூட்டங்கள்: ஒரு மாதத்தில் இரு தடவைகள்.

செயற்பாடுகள்;

* பங்குத் தந்தையுடன் இணைந்து ஆலய அலுவல்களில் ஈடுபடுதல்.
* கிராமத்து மாணவர்களிடையே கல்வியை ஊக்குவிக்க உழைத்தல்.
* கிராமத்தில் நடைபெறும் பொது நிகழ்வுகளில் உதவி செய்தல்.

அன்புமிக்க மணற்காட்டு இளைஞர்களே!

நூற்றுக்கு நூறு கத்தோலிக்கர்கள் வாழும் கத்தோலிக்க கிராமம் மணற்காடு என்பதனை அறிவோம். ஆனால் தற்போதைய உங்கள் அங்கத்தவர் எண்ணிக்கை மிகவும் குறைவாயுள்ளது. உங்கள் கிராமத்து ஏனைய இளைஞர்களையும் உங்களோடு ஒன்றியத்தில் இணைத்து, அவர்களோடு இணைந்து கிறிஸ்தவ இளைஞர்களாக உருவாகுங்கள். சமய சமூகப் பணிகளில் அயராது ஈடுபட்டு உங்கள் கிராமத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லுங்கள்.

இளைஞர் ஆணைக்குழு என்றும் உங்களுக்கு உதவத் தயாராயுள்ளது.

மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு

# மறைபரப்பு ஞாயிறு (22-10-1995)

யாழ் மறைவட்ட மறைபரப்புச் சபை

## இயக்குநரின் செய்தி

உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் என்ற இயேசுவின் கட்டளை உலகில் இன்னும் முழுமை பெறவில்லை. சொல்லப்போனால் ஈராயிரம் ஆண்டுகள் நிறைவெய்யும் இவ்வேளையில் கூட கிறீஸ்துவை அறிவிக்கும்பணி இன்னும் தான் உள்ளது. ஏனெனில் நாம் வாழும் இவ்வுலகில் இன்னும் கோடா கோடி மக்கள் கிறீஸ்துவை அறியாதவர்களாகவோ அல்லது ஏற்றுக் கொள்ளாதவர்களாகவோ இருக்கின்றார்கள். வாழ்வின் பிரச்சனைகள் எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள், சவால்கள் மத்தியிலும் வாழும்இம்மக்கள் இயேசுவைப் பற்றியும் அவருடைய செய்தியைப் பற்றியும் அறியவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அறியவேண்டிய செய்தி ஏது?

இறைவன் ஒருவர் இருக்கின்றார் என்பது மாத்திரமல்ல அவர் தன்னையே கிறீஸ்து யேசுவில் எங்களிற்கு வெளிப்படுத்தி உள்ளார். எங்களை அன்பு செய்து எங்களை இரட்சிக்கின்றார். எல்லாவிதமான அடிமைத்தளைகளில் இருந்தும் மீட்புத்தந்து எங்களுக்கு வாழ்வளிக்கின்றார் என்பதுதான் இந்த நல்ல செய்தி. இன்று இச்செய்தி உலகின் பல்வேறு திக்குகளிலும் ஒரு புதிய அவசரத்தொனியுடன் கேட்கப்படவேண்டும். இதுதான் மறைபரப்புப்பணி. இறைவனைக் கிறீஸ்துவின் வடிவத்தில் மற்றவர்களிற்கு எடுத்துரைப்பது.

இந்நற்செய்தியை அறிவித்து மறைபரப்பக் கடமைப்பட்டிருக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம்முந்தமுந்த நாம்வாழும் கிறீஸ்தவ சமூகத்திலே, எமது வழிபாட்டிலே, எமது பிரார்த்தனையிலே கிறீஸ்து யேசுவை அனுபவிக்க வேண்டும். அவர் அன்பை சுவைக்கவேண்டும். அவர் மீட்பில் பங்குபெற வேண்டும். அப்போதுதான் நாம் அனுபவித்ததையும் சுவைத்ததையும் அயலவருடன் பகிர்ந்து கொண்டிருப்போம். தேவையேற்படின் எமது வாழ்வை முற்றாக இறைவனுக்கு அர்ப்பணிக்க ஆயத்தமாய் இருப்போம்.

எனவே இவ்வருடம் மறைபரப்பு ஞாயிறு தினத்தில் கிறீஸ்துவை அனுபவித்து, பகிர்ந்து மறைபரப்பி வாழ நாம் அனைவரும் உறுதி கொள்வோம், நம்மத்தியில் தேவ அழைத்தல் இறைவனின் விஷேச கொடை, அக்கொடைக்கு மனத்தாராளமாக நாம் செவிசாய்ப்போம். எம் வாழ்வின் நிலைக்கு ஏற்ப நற்செய்தியைத் துணிவோடும்தெளிவோடும் எடுத்துரைத்து எம் திருமறையைப் பரப்பி வாழ்வோம்.

அருள்திரு
றெஜி இராஜேஸ்வரன்
மறைபரப்புச் சபை இயக்குநர்

## நற்செய்தி அறிவிப்பு ஆணைக்குழு தலைவரின் செய்தி

இன்றைய சூழ்நிலையில் எமது பகுதியில் மறைபரப்புப் பணி பல்வேறு வடிவங்களில் பரிணமித்துள்ளது. "பணிவிடை பெறவல்ல பணிவிடை புரியவே வந்தேன்"

இன்று கிறிஸ்துவை அறியாதோர் எத்தனை பேர்? அவரது நற்செய்திக்காக ஆன்ம தாகத்தோடு ஏங்கி நிற்கும் இதயங்கள் எத்தனை, எத்தனை. எனவே, இன்று இப்பணியை தொடர்ந்து செய்வதற்கு அழைப்பு எம்மனைவர்க்கும் உண்டு. மறை பரப்புப் பணி உன்னுடைய பணி என்பதை மறவாதே. "நற்செய்தி அறிவிப்புப் பணி திருச்சபைக்கு உகந்த அருளும் அழைப்புமாகும், திருச்சபையோடு இரண்டறக் கலந்த ஒன்றாகும். திருச்சபை வாழ்வது நற்செய்தி அறிவிக்கவே."

(6ஆம் சின்னப்பர்)

இன்றைய மனிதன் போதகர்களை விட சாட்சியம்சொல்பவர்களையே கேட்க விரும்புகிறான், அவன் போதகர் சொல்வதைக் கேட்கிறான் என்றால், அவர்கள் சாட்சியம் கூறுபவர்களாக இருப்பதால் தான்.

இன்று எமது பகுதியில் அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலையிலிருந்து விடுவிக்கத் தலத்திருச்சபை உழைக்கும் அதே வேளையில் ஆன்மீக வழிகளிலும் மக்களுக்கு புதிய உணர்வு கொடுக்க வேண்டும்.

அருட்சாதன ஆயத்தங்கள், இன்னும் பல இறைபணியாளர்களை உருவாக்கல், கிறிஸ்தவ ஞான உணர்வு ஊட்டல் போன்றன இன்றைய மறைபரப்பின் முக்கிய காரணிகளாய் விளங்குகின்றன.

அருள்திருP.யேசுநேசன் o.m.i.
தலைவர்—நற்செய்தி
அறிவிப்பு ஆணைக்குழு
யாழ் மறை மாவட்டம்.

## இறையரசு வளர இதயம் கொடுப்போம் எதையும் கொடுப்போம்

● சே. வி. ஜேம்ஸ்

"யாரை அனுப்புவோம்? நமக்காக எவன் போவான்?" இது அன்று இசையாஸ் இறைவாக்கினருக்கு இறைவனால் வழங்கப்பட்ட நற்செய்தி அறிவிப்பின் அழைப்பு. பழைய ஏற்பாட்டிலே நாம் பார்க்கின்ற போது இறைவன் சாதாரண மனிதர்களை தமது நற்செய்தி அறிவிப்புப் பணிக்காகத் தெரிந்தெடுக்கின்றார், அதற்காக அவர்களை இறைவன் கருவிலே தெரிந்தெடுத்து அர்ச்சித்து அனுப்புகின்றார்.

புதிய ஏற்பாட்டில் இயேசு தம்மோடு இருப்பதற்கென்று அப்போஸ்தலர்களை அழைத்து, அவர்களைப்பயிற்றுவித்து நற்செய்திப் பணிக்காக அனுப்புகின்றார். இதற்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது அந்தப் புனித ஆவியின் செயற்பாடு, அவரே எல்லோருடைய உள்ளங்களிலும் அபரிவிதமாக செயற்படுகின்றார்.

இன்று திருச்சபையிலும், திருச்சபைக்கு வெளியேயும் இந்த நற்செய்தி அறிவிப்புப் பணியானது இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. அன்னிய மதமாகிய கிறிஸ்தவ மதம் கிட்டத்தட்ட 16ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு பிற நாட்டு மத போதகர்களால் கொண்டுவரப்பட்டு வித்திடப் பட்டது. இந்த வித்திட்ட திருச்சபையாகிய மரத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பது திருச்சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரினதும் கடமை,

இறைத் தந்தையின் மாட்சிக்காகக் கிறிஸ்துவின் அரசை உலகெங்கும் பரப்பவும், அதனால் ஈடேறவும் தரும் மீட்பில் மனிதர் யாவரும் பங்கு பெறச் செய்யவும் அவர்கள் வழியாய் உலகம் முழுவதும் கிறிஸ்துவோடு உண்மையாகவே தொடர்பு கொள்ளச் செய்யவுமே திருச்சபை தோன்றி உள்ளது.

இன்று மறைபோதகப் பணி அல்லது நற்செய்தி அறிவிப்புப் பணி தனியே அபிஷேகம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு மட்டுமன்று, இயேசுக் கிறிஸ்து

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## தேனில்லாத மலர்கள் தேவையா ?

இயேசு இன்று திரும்பி வருவாரானால் !
அது நல்லதன்று !!!
அவர் பிரார்த்தனை செய்ய முடியாத தேவாலயங்கள்,
இறைவார்த்தையை அறிவிக்காத மறையுரைகள்,
இறைவனை மறந்த குருத்துவங்கள்,
தமக்காக மட்டுமே வாழுகின்ற விசுவாசிகள், ...
தமது திருச்சபையை அவர் தேட வேண்டியிருக்கும்
விரக்தியில் அவர் என்ன செய்வார்?

★ S. A. குமார்
ஆனைக்கோட்டை

## மசெனட் ஆண்டு

அன்புடையீர்

கடந்த இதழில் நாம் குறிப்பிட்டதை போன்று இவ்விதழில் எமது சபையின் ஸ்தாபகர் முத். இயூஜின் டி மசனெட்டின் புனித பட்ட நிகழ்வையொட்டி மன்னார் மறைமாவட்டத்தில் நாம் நடாத்திய கண்காட்சி கலை நிகழ்வுகள் பற்றிய செய்திகள் இதோ.

இந்நிகழ்வுகளுக்கு அருள்திரு. எட்வின் வசந்தராஜா அடிகளார், பிரதம ஒருங்கிணைப்பாளராக இருந்து செயற்பட்டார். இக்கண்காட்சியானது ஆவணித்திங்கள் 12ஆம், 13ஆம் தேதிகளில் மடுத்திருப்பதியில் திரு இருதய ஆண்டவர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருள்திரு. சேவியர் குரூஸ் அடிகளார் மங்களகரமாக குத்துவிளக்கேற்றி, நாடாவினை வெட்டி ஆரம்பித்தார். மடுத்திருப்பதிக்கு வந்திருந்த பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் இக்கண்காட்சியினை கண்டு பயன் பெற்றனர்,

இக் கண்காட்சியில் அமலமரித்தியாகிகள் சபையின் ஸ்தாபகர் ஆயர் இயூஜின் டி மசனெட்டின் வாழ்கை வரலாறு பற்றியும், அமலமரித் தியாகிகளின் உருவாக்கம், அவனியெங்கும் பரந்து புரியும் பணி பற்றிய விபரங்கள் விளக்கங்கள் படங்களுடன் காண்பிக்கப்பட்டன.

சிறப்பு நிகழ்வுகளாக அருட்திரு லம்பேட் அடிகளாரின் தயாரிப்பில் "சாட்சியத்தில் மாட்சி" எனும் பொம்மலாட்ட நிகழ்வும், அமதிகளின் பரந்துபட்ட பணித்தளங்கள் பற்றிய நிழற்படக் காட்சியும் இடம்பெற்றன.

இவற்றைத் தொடர்ந்து ஆவணித்திங்கள் 15ஆம் நாள் மாலை பெரிய பண்டிவிரிச்சான் ஆலய முன்றலில் பங்குத் தந்தை அருள்திரு பீற்றர் மனோகரன் தலைமையில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்விற்கு யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் சபையின் முதல்வர் அருள்திரு பி. பி. பிலிப் அடிகளார் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இதில் மடுத்திருப்பதியில் வசிக்கும் மக்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நடன நிகழ்வும் அருள்திரு ஜீவனதாஸ் அடிகளாரின் நெறியாள்கையில் அருள்சகோதரர்களினால் வழங்கப்பட்ட 'புரட்சியின் புத்தொளி' எனும் நாடகமும் மக்களின் பாராட்டை பெரிதும் பெற்றிருந்தன.

இந்நிகழ்வுகள் சிறப்புற நிறைவேற துணைநின்ற அருள் தந்தையர்கள், துறவிகள், பொதுநிலையினரை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறோம்.

இதோ இவ்விதழில் இயேசுவிடம் சரணடைந்த இளைய பிரபு அங்கம் ஐந்தினை அணைத்து மகிழ அழைத்து நிற்கின்றோம்.

நன்றி.

அ. பி. லொசிங்ரன், அ.ம.தி.

## 5 துணை நாடி தூய ஆவியை வேண்டினார்

பட்டதுன்பங்கள் போதாதா? பத்துவயது சிறுவனுக்கு பற்றாக்குறைக்கு கண்ணில் தழும்பு! கத்தி வைக்கவேண்டுமென்றார் வைத்தியர்,

அன்னைக்கு அறிவித்தான் அன்பு மகன். அறுவை நாளும் குறித்தாயிற்று. அன்னை வந்தால் அழுது விடுவாள், அதனால் அறுவையை அறிவித்தலின்றி செய்ய அடம்பிடித்தான்.

அறுவைக்கு வைத்தியர் ஆயத்தம் செய்தார்... வெட்டும், கிழிக்கும், குத்தும் கருவிகளைக் கண்டு கதி கலங்கி தன் அறைக்குள் ஓடினார்.

ஓடிச்சென்றவர் முழந்தாள் படியிட்டு ஏக்கப் பெருமூச்சுடன் மனமுருகி துணைநாடி தூய ஆவியை வேண்டினார்.

துணிவுடன் வெளிவந்து அறுவைக்கு அனுமதித்தார். கீறுகள் கிழிப்புகள் நீண்டன, விரைவுடன் செய்தாலும் வேதனை மிக்கது.

சின்னப்பிரபுவோ! சிணுங்கவில்லை, சிலிர்க்கவில்லை. மலர்ந்த முகத்துடன் தாங்கிக்கொண்டார். மறுநாள் தன்னைக் காணவந்த அன்னையை அன்பு பொங்க ஓடிச்சென்று அணைத்துக்கொண்டார்.

அறுவை முடிந்ததென அன்னைக்கு அறிவித்தார்; அன்னையும் ஆரத்தழுவி அன்பு முத்தம் அளித்தார்.

சோதனைகள் வேதனைகள் சூழ்ந்த வேளை தூய ஆவியின் துணை நாடியவர் துணிவு பெற்றவர் வெனிஸ் நகர் ஓடினார். அங்கு......

# இறைபணிக்கு உங்களை அழைக்கிறார்

## அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு


## யாழ் மறை மாவட்டம்

( *1994இன் விபரங்களின் படி )

| | |
|---|---|
| பரப்பு | — 1794 ச. மைல் |
| சனத்தொகை | — 908, 624 |
| கத்தோலிக்கர் | — 163, 360 |
| பங்குகள் (இராணுவப் பிரதேசத்திலுள்ளதும்) | — 49 |
| மறை மாவட்டக் குருக்கள் (வெளிநாட்டிலுள்ளவரும்) | — 85 |
| துறவறக் குருக்கள் | — 29 |
| துறவியர் ஆண்கள் (குருக்களல்லாத) | — 16 |
| துறவியர் பெண்கள் | — 192 |
| குருமாணவர் (மறைமாவட்டம்) | |
| ஆரம்பக்கல்வி | — 47 |
| மெய்யியல் | — 17 |
| இறையியல் | — 16 |
| மற்றும் (இடைநிலை) | — 04 |
| குருமாணவர் (துறவியர்) | |
| ஆரம்பக் கல்வி | — 22 |
| மெய்யியல் | — 04 |

குருக்கள் — துறவியர் — குருமாணவர்க்கான ஆணைக் குழுத் தலைவரின் செய்தி

## நவீன உலகிற்கு நற்செய்தி தூதுவர் வேண்டும்



நீதியான சமாதானத்தைத் தேடிய மக்கள் முன்னிலையில் போரும் பொருளாதாரத் தடையும் நிற்கின்றன. போரின் விளைவுகள் மத்தியில் மக்கள் பல விதத்திலும் தவிக்கின்றனர். வாழ்வதற்கு இடமின்றி வழியின்றி அர்த்தமின்றி திசையின்றி எல்லாவற்றிலும் மேலாக நம்பிக்கையுமின்றித் தவிக்கின்றனர். நடக்கும் அனர்த்தங்களும் கேட்கும் அவலக் குரல்களும் திருச்சபையின் சவால்களாக எழுகின்றன.

உண்மையான நீதி சமாதானம் நிறைந்த விடுதலை வாழ்வைக் கொடுக்க வல்லவர் இயேசு. ஆனால் அவருக்கு நெருங்கிய சீடர் போதாது. அவரின் திருச்சபையில் பணியாளர் போதாது.

மறைபரப்பு ஞாயிறு என்று கொண்டாடப்படும் இத்தினத்தின் மையப்பொருள் நம் உலகத்தை நற்செய்திமயமாக்குதலே. உலகினுள் உப்பாகவும் ஒளியாகவுமிருந்து நற்செய்தி விழுமியங்களை ஊட்டி இறையரசை ஆரம்பிக்கும் பணியாளர் வேண்டும்.

இந்நூற்றாண்டு முடிவிற்கு வருகின்றது. இரண்டாவது ஆயிரம் ஆண்டுகள் முடிவடைகின்றன. புதிய நூற்றாண்டும் மூன்றாவது ஆயிரமாண்டுகளும் பிறக்கப் போகின்றன. நவீன உலகின் சவால்களை சந்திக்க அதற்கேற்ற நற்செய்தியைக் கொடுக்க திறமைகளைக் கொண்ட ஆர்வமும், வீரமும் நிறைந்த இளைஞர்கள் திருச்சபையின் பணியாளராக வேண்டும். செபிப்போம் — செயற்படுவோம்!

அருள்திரு. எஸ். ஜே. இம்மனுவேல்

## மறை மாவட்ட குருக்கள்

புனித இராயப்பரின் வழித்தோன்றலாக மறை மாவட்ட குருக்கள் திகழ்கின்றார்கள். இன்று உலகில் எல்லா இடங்களிலும் தமது பணியையாற்றி வருகின்றார்கள். ஒரு மறைமாவட்டத்திற்கு தம்மை முற்றும் அர்ப்பணித்து, ஆயரின் தலைமையிலும், வழிகாட்டுதலிலும் தாம் சேர்ந்த மறைமாவட்டத்தில் தமது சேவையைச் செய்வதே முக்கிய நோக்கமாகும். தமது சிந்தனை, குறிக்கோள் என்பனவற்றை உலகலாவிய முறையிலும் பகிர்ந்து வளர்த்துக் கொள்ளவும் முயலுகின்றார்கள்.

தம்மைச் சூழவுள்ள மக்களின் தேவையை, காலத்தின் கோலம் அறிந்து எவ்வகையான பணி செய்ய வேண்டுமோ ஆயரின் அனுசரணையுடன் செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளார்கள், மக்களிற்கு ஆயனாக, ஆசிரியனாக வழிகாட்டுவதிலும் கஷ்ட, துன்பங்களில் கலந்து கொள்பவர்களாகவும் திகழ்கின்றார்கள்.

ஒவ்வொரு குருவும் இறைவன் அவரவர்களுக்கு கொடுத்த சிறப்பான கொடைகளை விசேடமான ஆற்றல்களைப் பயன் படுத்தி இறையரசைப் போதிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
புனித மாட்டீனார் குருமடம், யாழ்ப்பாணம்.

## செபமாலைக்கன்னியர் துறவறசபை

அ. ம. இ. சபைக்குரவரான வண. பி. ஏ. தோமஸ் அடிகள் விசுவாச உணர்வு மிக்கவராக இருந்ததுமன்றி, ஆழ்ந்த சமூக உணர்வுள்ளவராகவுமிருந்தார். சமூக ஏற்றத் தாழ்வு, பாகுபாடு, இறையுணர்வின்மை ஆகிய மனநிலைகளைப் புரிந்துணர்ந்து அவற்றைத் தன் எதிர்சாட்சியத்திற்கு ஆயுதங்களாக்கி, மனிதமதிப்புக்குக் கணிப்பற்ற, ஆனால் சமூகத்தின் மனச்சாட்சியின் அடித்தளத்தைத் தொட்டு ஒரு குழுவாக எதிர்ச்சாட்சியமளிக்க அவரால் உருவாக்கப்பட்டோரே ''செபமாலைக்கன்னியர்'' ஆவர்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு சவாலாக இவர்கள் தம் வாழ்க்கைத் தேவைகளுக்கு உடலுழைப்பிலீடுபடுவதும், சமூக வேறுபாடாகிய சாதி இன வேற்றுமைகளால் மனிதமாண்பு நசுக்கப்படுவதற்குச் சவாலாக சபையில் இவ்வேற்றுமை மனநிலை முற்றாகத் தவிர்க்கப்படுவதும், இறைவன் தேவையில்லை என்ற மனநிலை, இறைவனைத் தேடநேரமின்மை, பாவஉணர்வின்மை போன்ற ஆன்மீக வீழ்ச்சிக்கு எதிர்ச்சாட்சியாகச் செபமாலைக்கன்னியர் இறைவன் ஒருவரையே ஆவலாகத் தேடி, அவரது இறைமகத்துவத்துக்குரிய புகழ்ச்சியையளிப்பதும், இறையுணர்வின்மைக்குப் பரிகாரமாக செபத்தில், நாளாந்த குழுவாழ்க்கைத் தியாகத்தில், தியானத்தில் இறையரசு மனிதமனங்களில் மலரத் தம்மை அர்ப்பணிக்கின்றனர். இப்பரிகரிப்பு எதிர்ச்சாட்சியம் "எல்லோரும் ஒரே தந்தையின் பிள்ளைகள்'' என்ற பாகுபாடற்ற அன்பின் அடிப்படையிலிருந்து பிறக்கிறது. இப்பரிகரிப்பை முதலும் முழுமையுமாகச் சிலுவையில் தன் பாடுகள், மரணம், உயிர்ப்பினால் நிறைவு செய்தவர் யேசுவே. இம்மறையுண்மையின் அருட்சாதனமாக விளங்கும் நற்கருணையில் தன்னைத் தந்தைக்கு அன்பின் பரிகாரப்பலியாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் யேசுவின் "அன்பின்'' பரிகாரப் பணியாளராகிறோம்.

நற்கருணை முன் இடைவிடாது செய்யும் ஆராதனையில் மரியன்னையை மாதிரியாகக் கொண்டு, மீட்பின் மறையுண்மைகளைத் தியானித்து, செபமாலை செபிப்பதன் வழி, முழு உலகையும் நற்கருணை நாதர் முன், எல்லா மனித சமூகங்களுடனும் நெருக்கமான ஆன்ம உறவைக் கொள்கிறோம். உலக கண்களுக்கு நாம் மறைவாக இருந்தாலும் இறையனுபவ வாழ்வால் சமூகத்தின் உணர்வுகளைத் தாங்கிநிற்கிறோம்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: 123 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## இவர்கள் தான் அமலமரித் தியாகிகள்

முத்திப்பேறுபெற்ற ஆயர் இயூஜின் டி மசெனட் பிரான்சின் மார்சேயில் பட்டணத்து எக்ஸ் (Aix) என்னும் சிற்றூரில் 1782ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 1ஆம் நாள் பிறந்தார். கிறீஸ்துவின் நற்செய்தி சொல்ல, பிரான்சுப் புரட்சியால் சீரழிந்த பிரான்சிய சமூகத்தைக் கட்டியெழுப்ப ஒரு சிறு குழுவை 1816ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இது1826ஆம் ஆண்டு அமலமரித்தியாகிகள் சபையாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஏழைமக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு அவரது இதயம் இருந்தது. ஏனெனில் வறுமை என்ற வார்த்தை எப்பவுமே அவரது உள்ளத்தின் ஆழத்தில் இரக்கத்தை ஊறவைத்தது. "ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிப்பது'' என்ற குறிக்கோளைக் கொண்ட அ. ம. தியாகிகள், எங்கே ஏழைகள், பாதிக்கப்பட்டவர்கள், பாவிகள், அனாதைகள், வசதியற்றவர்கள் இருந்தார்களோ அவர்களைத் தேடிச்சென்று, இவர்களுக்காகத் தம்மை அர்ப்பணித்து அவர்களோடு இணைத்துக்கொண்டார்கள்.

காலத்துக்கும் இடத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப, தமது பணியை புதிய கண்ணோட்டத்தோடும், ஆழமான பார்வையோடும், தமது ஸ்தாபகரான இயூஜினின் ஆன்மீக (தாகத்தை) பணியை, புதிய சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை மாற்றினார்கள். பிரான்சில் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது இப்போது ஐந்து பெரும் பிராந்தியங்களிலுள்ள 70க்கும் அதிகமான நாடுகளிலும் அரும்பணி ஆற்றி வருகின்றது. இவர்களது இந்த மேன்மையான, தியாகம் நிறைந்த, புனிதமான பணியை இறைவன் ஏற்றுக்கொண்டார் என்பதை, இச்சபையின் ஸ்தாபகரான ஆயர் இயூஜின், இவ்வருடம் மார்கழி 3ஆம் திகதி அதி உன்னத புனித நிலைக்கு உயர்த்தப்பெறுவது காட்டுகின்றது. இவர் இந்த நிலைக்கு உயர்த்தப்பெறுவது என்பது ஒவ்வொரு அ. ம. தியாகிக்கும் இவரால் வளம்பெற்ற ஒவ்வொரு கிறீஸ்தவ மக்களுக்கும், திருச்சபைக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒரு நிகழ்வாகும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: "அமலோற்பவம்'' கொழும்புத்துறை

அப்போஸ்தலிக்கக் கார்மேல் சபை

## இறைவனே எம் வாழ்வின் நிறைவு

*கிறிஸ்துவாய் விளங்க*

*கிறிஸ்துவின் ஒளி பரப்ப*

### அப்போஸ்தலிக்க கார்மேல் சபை

**நோக்கம்**

செபத்தில் இறைவனை அனுபவித்த நாம் எவ்வித எதிர்ப்புகள் மத்தியிலும் தளராத சிந்தனையுடன், கிறிஸ்துவின் மீட்புப் பணியைத் தொடர்ந்தாற்றுவதே எமது தணியாத தாகம்.

**எமது அருங்கொடை**

இறையன்பின் நிறைவைச் செபத்திற் பெற்ற அனுபவமானது தன்னையே சரணடையச் செய்து, அன்பின் சேவையில் வெளிப்படுத்தி கிறிஸ்தவ ஒளியை எம்மில் பிரதிபலிக்கச் செய்து, மனித வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், கல்வியின் மூலமாகவும், சமூக சேவையின் மூலமாகவும் ஊடுருவச் செய்கின்றது.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
கார்மேல் மடம், யாழ்ப்பாணம்.

# வாருங்கள், பாருங்கள், சேருங்கள்!

## திருக்குடும்ப கன்னியர் சபை



18ஆம் நூற்றாண்டின் பிரான்சியப் புரட்சியின் கோர விளைவுகளினால் சிதறிக்கிடந்த சமுதாயத்தின் தேவைகளைக் கண்ணுற்ற இறைவன் பீற்றர் பியன்வெனு என்னும குருவின் மூலம் ஓர் சபையைத் தோற்றுவிக்க சித்தம் கொண்டார். போர்டோவின் திருக்குடும்ப சபையே அவ்ரால் நிறுவப்பட்ட பாரிய சபையாகும். 1820-ல் ஆரம்பிக்கப்பட்டு இன்று 175 வருடங்களை பூர்த்திசெய்கின்ற இச்சபையானது ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய நான்கு கண்டங்களிலும் உலகளாவிய சபையாக காலத்தின் தேவைகளுக்கேற்ப தரிசன நோக்கோடு உய்த்துணர்ந்து பணியாற்றி வருகின்றது. பரிசுத்த திரீத்துவம், திருக்குடும்பம், ஆதிக்கிறீஸ்தவர்களை முன்மாதிரியாகக்கொண்டு, தேவன்மாத்திரமே என்ற இலட்சியத்துடன், சிதறுண்ட மக்கள் அனைவரையும் இறைத்தந்தையின் அன்பில் ஒரே குடும்பமாக இணைக்கின்ற பணியை முக்கியமாகக்கொண்டு நான்கு கிளைகளாக இயங்கும் ஓர் பாரிய ஆன்மீக குடும்பமாக அமைந்துள்ளது இக்குடும்பம்.

இலங்கை மண்ணில் 134 வருடங்களாக பணியாற்றிவரும் இச்சபை, நிர்வாக வசதி கருதி வட, தென் மாகாணங்களாகப் பிரிந்து 107 மடங்களில் 600ற்கு மேற்பட்ட அப்போஸ்தலிக்க துறவியரையும், 8 தியானயோக அங்கத்தினரையும், 9 திருமட சார்பற்றோரையும், பல துணை அங்கத்தினரையும் (குருக்கள், பெற்றோர், இளைஞர், சிறுவர்) கொண்டுள்ளது:

வேதபோதகப் பணிக்காக ஆபிரிக்கா, கமறூன் சாட், சயீர், பீரு, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இந்தியா போன்ற நாடுகளுக்கும் இலங்கையில் இருந்து சகோதரர்கள் பணிபுரிய சென்றுள்ளமை எமது மண்ணில் இச்சபையின் வளர்ச்சிக்கு ஓர் அத்தாட்சியாகும்.

இறைவனின் குரலைக் கேட்டு, அவரது மீட்புப் பணிக்கு தங்களை இக்குடும்பத்தில் அர்ப்பணிக்க விரும்பும் அனைவருக்கும் திருக்குடும்பசபை அழைப்பு விடுகின்றது.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: 121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## திருவுளசபை உலகுசார்துறவு அமைப்பு

திருவுளச்சபையில் குருக்கள், மணத்துறவு ஏற்ற ஆண்கள், திருமணமானதம்பதிகள் கிறிஸ்துயேசுவில் சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் கட்டி எழுப்புவதைப் பணிநோக்காகக்கொண்டு, உலகின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். இறையரசைத் தங்கள் வாழ்க்கையிலும், தங்களைச் சூழ்ந்தவர்களின் வாழ்க்கையிலும், தாங்கள் வாழும் சமுதாயத்திலும் கொண்டுவர யேசுக்கிறிஸ்துவின் பணிக்கு தங்களை முழுதும் அர்ப்பணிக்கிறார்கள். நல்லசெய்தி அறிவுரைகளான பணிவு, ஏழ்மை, கற்பு என்னும் வாக்குறுதிகளை தத்தம் நிலைக்கு ஏற்ப எடுத்து வாழ்கின்றார்கள்.

இவர்களின் தனிவரம் ( Charism ) இறைவனின் மனித அவதாரத்தின் மறைபொருளில் இருந்து உதிக்கிறது. ''ஆகட்டும்'' என்று தங்களை முழுவதும் கையளிப்பதில் மிளிர்கின்றது.

5–5–5– என்னும் ஓர் இலகுவான ஆன்மீகத்தை கொண்டு, இறை திருவுளத்தை நிறைவேற்றுகின்றனர். மற்றவர்களின் குறைகளைத் தவிர்த்து, அவர்களின் நற்குணங்களை மட்டுமே கண்ணோட்டத்தில் வைத்து, இறைவன் முன் தங்கள் பிரசன்னத்தையும் தங்களில் இறைபிரசன்னத்தையும் ஏற்படுத்திக்கொள்கின்றனர். இதனால் அனைத்து பொதுநிலையினரும் தத்தம் நிலைகளில் இருந்தவாறே மறைபரப்பு அலுவலைச் செய்ய முடிகின்றது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
திருவுளச்சபை, கொழும்புத்துறை.

## நல்லாயன் சபை

நல்லாயன் கன்னியர் சபையை நிறுவியவர் புனித மேரி யூபிறேசியா பெலற்றியர். இவர் பிரான்ஸ் நாட்டில் நோர்முட்டி என்னுமிடத்தில் 1796 யூலை 31 இல் பிறந்தார். இவரது இளமைப்பெயர் ரோஸ் வேர்ஜினி ஆகும்.

இவரது இளமைப்பருவத்தில் அருட்சகோதரி ஒருவர் இவரைப்பார்த்து ரோஸ் நீ ஒருநாள் சம்மனசாக மாறுவாய் அல்லது பிசாசாக மாறுவாய் என, அதற்கு துடுக்குக்காரப் பெண்ணாகிய ரோஸ் நான் கன்னியராவேன் என்று பதில் கொடுத்தாள். இவர் நவகன்னியராகப் போகும் போது பெரிய பாடுபட்ட சுருபத்தின் முன் முழந்தாளிட்டு மேலே உற்று நோக்கினாள். அப்போது ஓர் ஒளி சிலுவையினின்று இறங்கி வந்து அவளது இதயத்தைத் துளைத்து, அதில் ஆத்துமங்களின் மீது அன்பின் அனலை மூட்டி எரியப் பண்ணியது.

காணாமல் போன ஆடுகளைக் கண்டுபிடித்து ஆத்தும சிகிச்சை செய்து அவர்களைக் குணப்படுத்துவது எவ்வளவு பாராட்டுக்குரிய வேலை! இதைவிடச் சிறந்த வேலையும் உண்டோ? யேசுக்கிறிஸ்து மனிதனாகப் பிறந்து பாடுபட்டு மரித்ததும் இதற்காக அல்லவா? உலகில் உள்ள உயிர்கள் அனைத்துக்கும் உணவும் உடையும் அளித்து ஆதரிப்பதைவிட ஓர் ஆத்துமத்தை இரட்சிப்பது எவ்வளவு மேலானது. கடவுளின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டது மனித ஆத்துமம். அந்த ஆத்தும இரட்சணியத்தில் ஈடுபடுவது எவ்வளவு மகத்தானவேலை.

புனித மேரி யூபிறேசியா ஆத்துமத்தின் உயர்வை உணர்ந்ததால் ''ஒரு ஆன்மா உலகை விட மேலானது'' என்ற விருது வாக்கிற்கு ஒப்ப கடைசிவரையும் உழைத்தார்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
நல்லாயன் கன்னியர்மடம், ஆனைக்கோட்டை.

## ✠ திருச்சிலுவைக் கன்னியர்கள் ✠

காலத்திற்குக் காலம் மனித மாண்புகள் சிதைக்கப்பட்டு, கிறிஸ்தவ மதிப்பீடுகள் உருக்குலைந்து போகும் வேளையில் அவற்றைச் சீர்தூக்கிப் புதுப்பிக்க இறைவன் பலரை அழைத்துள்ளார், கிறிஸ்துவின் உன்னதவாழ்வைத் தன்வாழ்வாகமாற்றி, ஏழ்மை, தாழ்மை, கருணை ஆகிய அருங்குணங்களால் அழிவின் பாதையில் சென்றுகொண்டிருந்த உலகையும், தளர்ந்து வீழ்ந்து கொண்டிருந்த திருச்சபையையும் கட்டியெழுப்ப 12ஆம் நூற்றாண்டிலே புனித பிரான்சிஸ் அசிசியார் தோன்றினார். அவர் வழிவந்த அருட்தந்தை தியடோசியஸ் வுளோரன்ரனி 18ஆம் நூற்றாண்டிலே, சுவிட்ஸ்லாந்திலே பிரான்சியப் புரட்சியின், கைத்தொழில் புரட்சியின் பின் விளைவுகளான நாஸ்திகம், கைவிடப்பட்ட வயோதிபர்கள் கவனிப்பாரற்ற நோயாளிகள், இளம் குற்றவாளிகள், இவர்களின் தேவைகளுக்கு நிறைவு காண, காலத்தின் தேவைகளில் கடவுள் சித்தம் கண்டு, சிலுவை வாழ்வைப் புரிந்து, தேவ பராமரிப்பிலே நம்பிக்கை கொண்டு பிறருக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் கன்னியர்களை உருவாக்க நினைத்தார். இவரது கனவின் நினைவே முதல் திருச்சிலுவைக் கன்னியர்களான அன்னை பேணடாவும் அவவின் சக சகோதரிகள் இருவரும் ஆவார்கள். சுவிட்ஸ்லாந்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கன்னியர்களின் சேவை மிக விரைவில் ஏனைய நாடுகளிலும் பரவியது.

அருட்சகோதரிகளின் சேவை கல்வி அறிவை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்ட அந்தக் காலகட்டத்திலே நோயாளர் பராமரிப்பு, முதியோர் நலப்பேணல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, 1930ஆம் ஆண்டிலே திருச்சிலுவைக் கன்னியர்கள் இலங்கைக்கு அழைக்கப்பட்டனர். நாளடைவில் இவர்களின் பணி பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள சகல நிலையினருக்கும் உதவும் வகையில் வளர்ந்து பாலர் விடுதி, பெண்கள் விடுதி, நோயாளர் பராமரிப்பு, வயோதிபர் இல்லம், நடமாடும் சுகாதார சேவை, மறைக்கல்வி போன்ற சேவைகளைச் செய்யத் தூண்டியது. உடல் உள, ஆன்ம நிலைகள் பாதிக்கப்பட்டு, அகதிகளாக அநாதைகளாக, நோயாளர்களாக இருக்கும் மக்கள் மத்தியில் சிலுவையை தம் வாழ்வின் மையமாகக் கொண்டு கிறிஸ்துவின் குணமாக்கும் பணியைப் புரிய, நம்பிக்கையூட்டும் கருவிகளாக மாறத் தம்மை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ முன்வருபவர்களைத் திருச்சிலுவைக் கன்னியர்கள் அழைக்கின்றார்கள்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

## பொதுநிலையினர் (1ஆம்பக்கத் தொடர்ச்சி)

டன் இவ்விழா ஆரம்பமானது. நிய S. J. இம்மானுவேல் தொடர்ந்து இடம்பெற்ற அடிகளார், தலத்திருச்சபை நிகழ்வில் தொடக்கவுரை ஆற் யில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த புனிதமான இப்பணி ஓர் கூட்டு முயற்சி என்றும், பொது நிலையினரின் பொற்காலத்திற்கு வழிவகுக்குமென்றும் கூறினார்.



பதிவாளர் திரு. A. S. அகஸ்ரீன் மறையியல் டிப்ளோமாகற்கைநெறி ஆரம்ப முயற்சிகள் பற்றிய அறிக்கையை வாசித்தளித்தார். திருக்குடும்ப சபை மாகாணத் தலைவி சகோ. சோபியா தனது ஆசியுரையில் இறை சாயலைப் பதித்த மனநிலையுடன் பொது நிலையினர் உயிரூட்டமுள்ள கற்களாக விருந்து சமுதாயத்தைக் கட்டியெழுப்பவேண்டுமெனக் கூறினார். நன்றியுரை திரு. அ. சந்தியாப்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டது.



## புனித வளனார் துறவற சபை

புனித வளனார் சபைத் துறவிகளாகிய நாம் கற்பு, கீழ்ப்படிதல், ஏழ்மை என்னும் வார்த்தைப்பாடுகளின் அடிப்படையில் எம்மை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணம் செய்துள்ளோம். இந்த அர்ப்பண வாழ்வுக்கு எம்மை தகுதியுள்ளவர்களாக்குவது செபம்; செபம் எமது அன்றாடச் செயல்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கின்றது. இறைவனை மகிமைப்படுத் படுத்துவதே நமது முக்கிய குறிக்கோளாக அமைகிறது.

எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை அறநெறியில் வழிநடத்தி அவர்களை இறை அன்புக்கும் பிறர் அன்புக்கும் இட்டுச்செல்லும் கருவிகளாக நாம் செயல்படுகின்றோம். பிறர் அன்புப் பணியில் நாம் ஈடுபடும் பொழுது யேசுவின் மனநிலையை நாம் கொண்டிருக்கவேண்டும். இறைமகன் இயேசு மனுஉரு எடுத்து பிறருக்காகத் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தார். புனித சூசையப்பரும் திருக்குடும்பத்தின் தலைவராக இருந்து பிறருக்கு ஒரு எடுத்துக்காட்டான வாழ்வை அடக்கமாக வாழ்ந்துவந்தார். அவர் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை, இவரை எமது தாய் திருச்சபை நீதிமான் எனப் போற்றுகின்றது.

புனித வளனார் சபைத் துறவிகளாகிய எமது வாழ்வும், பிறர் அன்புப் பணியும் இயேசுவையும் புனித சூசையப்பரையும் அடியொற்றிய வாழ்வாக அமைந்தது.

இளைஞர்களாகிய நீங்களும் இதைப்பற்றி சிந்திக்க அழைக்கப்படுகின்றீர்கள். அறுவடையோ மிகுதி வேலையாட்கள் குறைவு என்று கூறிய நம் யேசுபிரான் உன்னையும் இப்பணி வாழ்விற்கு அழைக்கின்றார், அதற்கு உனது பதில் என்ன?

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
745, மருத்துமனை வீதி, யாழ்ப்பாணம்.

# இலங்கையில் "ஆசிபா" (ASIPA) பட்டறை

## ஆசிய திருச்சபைக்கு ஒரு புதிய மேய்ப்புப்பணி அணுகுமுறையும் ஒரு புதிய மேய்ப்புப்பணிப் பார்வையும்

1990ஆம் ஆண்டில் ஆசிய ஆயர் பேரவைகளின் ஒன்றியத்தின் 5வது முழுமையான கூட்டம் இந்தோனேஷியாவிலுள்ள பாண்டுங் நகரில் நடைபெற்றது. வளம் பொருந்திய சமய, கலாசார பாரம்பரியங்களின் தொட்டிலாகிய ஆசியாவில் திருச்சபையாக விளங்குவதற்கு ஒரு புதிய வழியைக் கடைப்பிடிப்பதில் ஆயர்கள் பெரிதும் ஈடுபட்டனர்.

ஆகவே அவர்கள் தமது இறுதி அறிக்கையில் குறிப்பிட்டதாவது: "ஆசியாவின் திருச்சபை பொதுநிலையினர், துறவிகள், குருக்கள் அனைவரும் ஒருவரையொருவர் சகோதரராக ஏற்றுக்கொள்ளும் சமூகங்களின் ஆன்மீகக் கூட்டுறவாக விளங்க வேண்டும்."

"சகல விசுவாசிகளினாலும் பெறப்படும் தூய ஆவியானவரின் அருட்கொடைகள் இனங்கண்டு செயற்படுத்தப்படும் பங்கேற்கும் திருச்சபையாக விளங்க வேண்டும். உயிர்த்த ஆண்டவருக்குப் பிரமாணிக்கமாகவும், அன்பாடும் சான்று பகர்ந்து, பிறமத மக்களுக்குக் கரம் நீட்டி அனைவருக்கும் முழுமையான திருச்சபையாயாகும் ஒரு தீர்க்கதரிசன அடையாளமாகவிளங்கும் உருமாற்றத்தின் புளிக்காரம் ஆகும்.

ஆபிரிக்காவில் லும்கோ நிறுவனத்தை வெற்றிகரமாக வளர்த்தெடுத்த பிதா ஒஸ்வால்ட் ஹேர்மரினதும் அவரது ஊழியரினதும் உதவியுடன் F.A.B.C. பொதுநிலையினர் அலுவலகம் பல ஆலோசனைக் கூட்டங்களையும் பட்டறைகளையும் நடத்தி, ஆபிரிக்காவின் லும்கோ நெறிகளைப் போல ஆசியாவிலும் பங்கேற்கும் ஒரு திருச்சபையை வளர்ப்பதற்கு தகுந்த மேய்ப்புப்பணி முறையொன்றைக் கண்டு பிடிக்க முயன்றுள்ளது. இந்தப் புதிய அணுகுமுறை "ஆசிபா" அல்லது "முழுமையான ஆசிய மேய்ப்புப்பணி அணுகுமுறை" எனப்படும்.

"ஆசிபா" பட்டறை, திருச்சபையில் கூட்டுப் பொறுப்பு, பங்கேற்கும் திருச்சபையில் பங்கு மேய்ப்புப்பணி சபைகள், சிறிய கிறிஸ்தவ சமூகங்களின் இயையும் பங்கும், நற்செய்தி பகிரும் முறைகள், ஆசிய சமுதாயச் சூழலில் ஆண்டவரின் செய்தியை மீண்டும் பிறக்கச் செய்தல், குழுத் தலைவர்களைப் பயிற்றுவித்தல் போன்ற விடயங்களைக் கையாளும். இது அடிப்படையில் பயிற்றுபவர்களைப் பயிற்றும் ஒரு நெறியாகும். இவர்கள் தமது பங்குகளிலும் மறைமாவட்டங்களிலும் இது போன்ற உருவாக்கப் பயிற்சிகளை நடத்துவரென எதிர் பார்க்கப்படுகிறது.

அண்மையில் நிறைவேறிய தேசிய மேய்ப்புப்பணி மகாநாட்டில்! தொடர்செயலாக இது வருவது பொருத்தமானதே. 2000வது ஆண்டு நிகழும் மாபெரும் யூபிலிக்கு இது பொருத்தமான கொண்டாட்டமும் ஆகும். இறையருள் சுரக்கும் இவ்வேளையானது சகல விசுவாசிகளின் செபத்துடனும் கூடியதாக இருப்பது அவசியமாகும்.

+ கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
திருமலை – மட்டுநகர், ஆயர்
பொதுநிலையினரின் தேசிய ஆணைக்குழுத் தலைவர்.

## ஐ. நா. பொது அமர்வில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் ஆற்றிய உரையின் சுருக்கம்

ஐக்கிய நாடுகள், மற்றும் திருப்பீடத்தின் நோக்கங்களும் அணுகுமுறைகளும் வேறுபட்டாலும், மனித குலத்துக்கான பொது அக்கறையின் அடிப்படையில் இருவருக்குமிடையே நல்ல ஒத்துழைப்பு இருக்கிறதென்றார் திருத்தந்தை.

மனித குலவரலாற்றில் சுதந்திரத்திற்கான ஏக்கம் முக்கிய இடத்தைக் கொண்டுள்ளது. மனித உரிமை பற்றிய ஐ. நா. வின் சர்வதேச ஒப்பந்தம் நம் காலத்தின் மனச்சான்றின் மிக உன்னத வெளிப்பாடு. மனித குலத்தின் வளமான வருங்காலத்திற்கு சர்வதேச ஒழுக்க நெறி சட்டத்தை ஏற்றுக் கொள்வது இன்றியமையாதது. மனிதனுக்கு மதிக்கமுடியாத மாண்பும் மதிப்பும் இருக்கிறதென்பதை அங்கீகரித்து ஏற்றுக் கொள்வதிலிருந்து, விடுதலைக்கான ஏக்கம் கிடக்கின்றது. சுதந்திரத்திற்கான மனிதனின் ஏக்கம் அடக்கி ஒடுக்கப்பட முடியாதது. (The quest for freedom cannot be suppressed. It arises from the recognition of the dignity and value of the human person.)

சுதந்திரத்திற்கான ஏக்கம் நாடுகளையும் தனி மனிதர்களையும் தன்னில் கொண்டுள்ளது. நாடுகளின் உரிமைகள் மீறப்பட்டதாலேயே 2ஆம் உலகப்போர் இடம்பெற்றது. உலகப் போருக்குப் பின்னால், பனிப் போரின் காலத்திலும் நாடுகளின் உரிமைகள் மீறப்பட்டன. கடந்த காலங்களிலும் ஏன் தற்போதும் தனி மனிதர்களும் நாடுகளும் சுதந்திரமாய் வாழ்வதற்கான உரிமைக் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

பொதுக் கருத்துக்கும், தனி மனிதர்க்கும் மற்றும் குழுக்களின் கருத்துக்களுக்கும் இடையிலான பதட்ட நிலைகள் அகற்றப்பட வேண்டுமானால் அவர்கள் அமைதியிலும் சீர்தூக்கிப் பார்க்கும் வழியிலும் வாழப்பட வேண்டும். சமூக வாழ்வில் ஆதரவு கொடுத் ஊக்கமளிக்கப்படும் மனித உரிமைகளே நாடுகளி உரிமைகள்.

அண்மைக்கால நிகழ்வுகளைப் பார்க்கும்போது உலகம் இன்னும் வேறுபாடுகளுடன் வாழக் கற்றுக் கொள்ளவில்லையென்று தெரிகிறது. மற்றவர்கள் நம்மிலும் வித்தியாசமானவர்கள் என்பதை ஏற்க மறுக்கும் போது வன்முறையும் திகிலும் தலை தூக்குகின்றது என்ற திருத்தந்தை, சுதந்திரம், ஒழுக்க நெறி, உண்மையும் ஐக்கிய நாட்டு நிறுவனமும் விடுதலையின் வருங்காலமும், அன்புக் கலாசாரம் என்பவை பற்றி எடுத்துரைத்து, உரையை நிறைவு செய்தார்.

## இறையரசு வள...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் பெயரால் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனுடையவும் கடமையாகும்.

எனவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் விஷேசமாக இப்பணிக்கென இறைவனால் அழைக்கப்பெற்றவர்கள். நற்செய்தியை அறிவிப்பதில் மட்டுமல்ல தம்முடைய சிறந்த வாழ்வாலும் சிறந்த நற்பணியாளர்களாக விளங்க வேண்டும். இதற்கென ஆவியானவர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். எனவே இப்பணியில் ஈடுபடும் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நாளுக்கு நாள் தம்மைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இவர்கள் உயிருள்ள விசுவாசத்தாலும், தவறாத நம்பிக்கையாலும் நிறைந்து செப மனிதராக விளங்க வேண்டும். வலிமை, அன்பு, தன்னடக்கம் ஆகிய உணர்வுகளால் பற்றி எரிய வேண்டும். எல்லாச் சூழ்நிலைகளிலும் தன்னிறைவோடு இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். எனவே குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகிய எல்லா மறை · போதகருமே தக்க ஆயத்தமும் பயிற்சியும் பெற வேண்டும்.

இறுதியாக எல்லோரிலும் செயற்படுகின்ற உயிருள்ள ஆவியின் கதிர்களை நாம் இனங்கண்டு அவர்களை மேலும் மேலும் இப்பணிக்கென ஊக்கப்படுத்த வேண்டும். இது ஒவ்வொரு பங்குத் திருச்சபையின் தலைவர்களதும் கடமை. எனவே திருச்சபையைக் கட்டி எழுப்ப நாம் ஒவ்வொருவரும் கரம் கொடுப்போமா?

" யாரை அனுப்புவோம்?
நமக்காக எவன் போவான்?"
— ஆண்டவர்

" இதோ அடியேன்
என்னை அனுப்பும்"

## மறை பரப்புப் போதனையின் மகுடமென்ன?

இறைமகனை அறியாத எண்ணில் லாதோர்
இருளிலொளி பெறுவதிலே இன்பம் நீட
மறைபரப்பும் பணியினிலே மகிமை தேட
மக்களுக்காய் மீட்பளித்த தேவ மைந்தன்
நிறையருளை நினைந்துயரச் சமுதாயத்தின்
நிலைவளரத் துணை அருளும் நினைவிலாழ்வோம்
வறுமை துயர் போ கொடுமை கண்ணீர் வெள்ளம்
வற்றிடவே வாழ்வில் வெற்றி காண்போம்.

குரவர்களோ கன்னியரோ துறவிமாரோ
குடும்பத்தார் பாலர்களோ இளைஞர்தாமோ
அருமறையின் திருவுரையை அகிலமெங்கும்
ஆர்வமுடன் பரப்புகின்ற ஆவல்கொள்வோம்
இருமையருள் பொழியுமுயர்த் தூய ஆவி
ஏவுதலில் தொண்டாற்றும் இதயம் கூர்வோம்
கருமமதே கண்ணாகிச் செபதபத்தில்
காலமெல்லாம் எரிந்துருகி் கடமை செய்வோம்.

மறைபரப்பும் போதனையி மகுடமென்ன?
மண்ணுலக மக்களொரு குடும்ப மாகி
உறவு தன்னில் ஒன்றித்து ஒரு தாய் பெற்ற
உடன்பிறப்பாய் வாழ்கின்ற ஒருமையாகும்
இறைமகனார் அன்புவழி அமைதி சாந்தம்
எவரையுமே ஆதரிக்கும் மனித நேயம்
நிறைவுறவே சாதனைகள் நிரம்ப என்னும்
நிலவுலகில் உண்மைநெறி நிறுத்திக் காப்போம்.

★ " யாழ் ஜெயம் "

## உருவா? நிழலா?

நற்செய்தியா ?
அது என்ன ?
கிறிஸ்து கொண்டுவந்த நல்ல செய்தி என்ன?
இன்றைக்கு அது எனக்கு என்ன?
" வீட்டுக்கோர் விவிலியம் " என்ற விளம்பர வாசகமா?
வீதியால் இடம் பெயர்வோர் படுத்துறங்க வதிவிடமா?
பங்கு தோறும் மகாஞான ஒடுக்கங்களா?
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உவப்பான
மறையுரைகளா?
புதுப்புனல் என்று கூறிப் புரியாத வாக்கெடுப்புக்களா?
பசித்திருக்கும் ஒரு வாய்க்குப் பகிர்ந்தளிக்கும் மனநிலையா?
புகைகின்ற உள்ளங்களில் புதுத் தெம்பு வழங்குவதா?
எது இங்கு நல்ல செய்தி?
எதை இங்கு பரப்ப வேண்டும்?
சிந்திப்போம் ?

★ G.J. பிரதீபன் (நவாலி)

## மறை அறிவிப்புச் செபம்

இறைவா! என்னை விசுவாசத்தின்
ஓர் அப்போஸ்தலனாக்கியருளும்.
எங்கே இருளுண்டோ அங்கே ஒளியைப் பரப்பவும்,
எங்கே பகைமையுண்டோ அங்கு அன்பையும்,
எங்கு பிழையுண்டோ அங்கு உண்மையையும்,
எங்கு பாவிக்கு மனமடிவோ அங்கு மன்னிப்பையும்,
எனது செபத்தினாலும், தருமத்தினாலும் ஒவ்வொரு
கண்டத்தினதும்
தேவையை நிவர்த்தி செய்ய உமது அருளைத் தாரும்.

எங்கு நான் செல்ல இயலாதோ அங்கு என் காணிக்கையை அனுப்பவும், நான் காணாமல் வேதனைப்படுவோருக்கு எனது வேதனைகளை ஒப்புக் கொடுக்கவும், சிலுவையை அறியாதவர்கள் மத்தியில் எனது பரித்தியாகத்தினால் சிலுவையை நாட்டவும் எனக்கு உமது அருளைத் தாரும். இதை உமது திருமகனாகிய கிறிஸ்துவின் பெயரால் கேட்கிறேன் — ஆமென்.

## குருசுமுத்தண்ணையின் கிசுகிசு-89

குருசு: எங்க தம்பி ஓடுறாய் இப்ப?

அடைக்கலம்: எல்லாரும் ஓடுகினம். அதுதான் நானும் ஓடுறன் அண்ணே,

குருசு: அட தம்பி எல்லாரும் ஓடுறதிற்காக நீ ஓடாம ஏன், எதுக்கு எண்டு அறிஞ்சு பார் தம்பி.

அடைக்: அதுக்கு எங்கயண்ணே நேரம் இருக்கு?

குருசு: எதுக்குத்தான் இப்ப உங்களுக்கு நேரம் இருக்கு? எல்லாம் சாத்திரம் பார்க்க மட்டும் நேரம் தேடுவியளே ஒழிய நல்லதை செய்யிறதிற்கும் நாலு பேர் சேர்ந்து பேசுறதிற்கும் நேரம் கிடையாம ஓடுவியள். பிறகு ஒரேயடியாய் படுக்கையில் கிடக்கேக்க தானே பரமனையே தேடுறியள்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| 9 | எம் விழிகளின் ஒளி யேசு |
| 20 | எம் வாழ்வின் வழி யேசு |

## சின்ன மனிதன்

சின்ன மனிதன் சக்கேயு
சின்னக் காலால் ஓடியே
அங்கு நின்ற அத்தியில்
தொத்தி ஏறி நின்றானே!
அண்ணல் யேசுவைப் பார்க்கவே
ஆவல் அதிகம் கொண்டானே
அவ்வழியாய் வரும் யேசுவை
ஏக்கத்துடன் பார்த்தானே!
அந்தக் கணம் யேசுவும்
அவனை ஏறெடுத்துப் பார்த்துமே
''உன் வீட்டில் தங்கவேண்டும்
விரைவாய் இறங்கி வா!'' என்றாரே
உள்ளம் குளிர்ந்த சக்கேயு
துள்ளிக் குதித்து வந்துமே
கடின உள்ளம் உருகிடவே
இரக்கம் நெஞ்சம் பெற்றானே!
(லூக். 19:1–10)

### சிறுகச் சேருங்கள்

**விடைகள் :** 1) சுதன் 2) லூசியா 3) அசிசி 4) தோமஸ் 5) கல்வி 6) நிறைவு

அன்புக்கண்மணிகாள்!

இறையேசுவின் ஆசிகள் உங்களுள் நிறைவதாக!

''சின்ன மனிதன்'' என்ற பாடலைப் பாடிப்பாருங்கள். லூக்காஸ் நற்செய்தியில் அதிகாரம் 19:1-10 படித்துப்பாருங்கள்.

திருப்பலியில் திருவிருந்து அருந்தும் பொழுது உங்களுள் வரும் யேசுவை உற்று உணர்ந்து உறவாடி நிறைவு பெறுங்கள்.

சிறுகச் சேருங்கள் விடைகளைச் சரிபார்த்து, உங்களை நீங்களே மட்டிடல்செய்யுங்கள்.

### சிறுகச் சேருங்கள்

விடை மூன்றெழுத்துச் சொல்

7. காலையிலும், இரவிலும் நேரம் கிடைக்கும்போதும் எந்நேரமும் இறைவனுடன் உறவாடுவதே இது ஆகும்.
8. மீட்பின், காப்பின், வலிமையின் சின்னம் இது.
9. உன்னைப்போல் உன் அயலானையும் இது செய்வாயாக.
10. நித்திரையில் இறைவனால் நரக நெருப்பின் கொடூர வேதனை காண்பிக்கப்பட்ட புனித தெரேசம்மாள் 1515இல் ஸ்பெயின் நாட்டில் இவ்வூரில் பிறந்தார்.

விடைகள் அடுத்த சுடரில்

அன்பின், அன்பு விழி,

## கிறிஸ்தவத்தின்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கவேண்டும். போர்த்துக்கீசர் வருவதற்கு முன்னரே இலங்கையிலேயும், தமிழ்பகுதிகளிலும் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதை சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ளலாம். (பேராசிரியர். கே. இந்திரபாலா)

இதன் நிமித்தமே யாழ்ப்பாண மேற்றாசனத்தில் காணக்கிடக்கின்ற 1877இல் எழுதப்பெற்ற வழிகாட்டியில் கி. பி. 189இல் அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த புனித பன்ரேனாள் இந்தியாவில் கிறிஸ்தவத்தை போதித்தார் எனவும் புனித மத்தேயு சுவிஷேசத்தின் ஏபிரேய மூலப்பிரதியை கண்டார் எனவும் கி. பி. 871இல் இங்கிலாந்து அரசன் பெரிய அல்பிறட் 'சித்ஷெல் எம்' என்றவரை புனித தோமையாரின் கல்லறையை சந்திக்க அனுப்பினார் என்றும் குறிப்பிடுகின்றது.

18ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற தேவதாழ்ச்சி உத்தியானம்' அல்லது திருச்சபைச் சரித்திரம் என்ற முகவுரையில் கீழ் குறிப்பிடப்படும் வாக்கியங்கள் காணப்படுகின்றன.

''சிந்துதேசத்தின் அப்போஸ்தலரான புனித தோமையாரால் வேதஉபதேசம் பண்ணப்பட்டதென, நிசேபொருஸ் என்பவர்...'' என்றும் குறிப்பிடப்படுகின்றது.

எனவே இது காணும் நாம் அறிந்தவற்றினூடாக கிறிஸ்தவம் இலங்கை நாட்டில் முதல் ஐந்து நூற்றாண்டுகளில் காலூன்றியிருந்தமை நிதர்சனமே.

## திருத்தந்தையின் இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்-26

★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

கண்களில் கண்ணீர் ஓடகைகளை அகல விரித்து முழங்காலிலிருந்து தொடர்ந்தார். ''...வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆண்களே, பெண்களே உங்களை மண்டியிட்டு, கெஞ்சி பிச்சை கேட்கிறேன். கொடுமைகளை நிறுத்திக் கொள்ளுங்கள். அமைதி வழிக்கு வாருங்கள். அமைதிக்காக கொடுமைப் போரில் ஈடுபடலாம் என்கிறீர்கள். கொடுமைக்குப்பின் அமைதியைத் தேடுவதில் சுபம் இல்லை. நானும் அமைதியை நாடுகிறவன். நீங்களும் அதற்காக அலைகிறவர்கள். வாருங்கள் கூடிப்பேசி முடிவெடுப்போம். வன்முறை நீதியைக் காலங் கடத்துகிறது. நாளைக்கெனத் தேடுகின்ற அமைதிக்கும், சுகங்களுக்கும் நிகழ்காலக் கொடுமைகளே புதைகுழிகளாய் எழுகின்றன. கிறிஸ்துவின் பெயரால் அழைப்பை விடுக்கிறேன். வாளைத்தூக்கி எறிந்து விடுங்கள். வரலாற்றில் இதம் காண வன்முறையை விட்டொழியுங்கள்...''

உருக்கமான உணர்ச்சிபூர்வ உரையோடு அயர்லாந்துப் பயணம் முடிவுற்றது.

அயர்லாந்தின் 35 இலட்சம் மக்கள் தொகையில் 25 இலட்சம் மக்களுக்கு அதிகமானோர் திருத்தந்தையைப் பார்த்து ஆசிர் பெற்றனர் என்று சொல்லப்படுகிறது, அயர்லாந்து மக்களைத் தன் அன்பால் கவர்ந்திழுத்தார் என்று சொல்ல இங்கு கூடிய மக்கள் வெள்ளமே சாட்சி

''...இறைவன் உங்களை என்றென்றும் ஆசீர்வதித்துக் காப்பாராக...'' என்று அயர்லாந்தின் கேலிக் மொழியில் ஆசீர் கூறினார். மக்கள் கரவொலி எழுப்ப ''...என்றும் பிரமாணிக்கமுள்ள அயர்லாந்து...'' என்று வியந்து கூறியவராய் அயர்லாந்தை விட்டு திருத்தந்தை பயணமானார்.

### விருந்தினரை நன்கு வரவேற்கும் அமெரிக்காவில் திருத்தந்தை

ஒக்டோபர் 1 ஆம் நாள் 1979ஆம் ஆண்டு திருத்தந்தை அமெரிக்காவின் பாஸ்ரன் நகரில் வந்து இறங்கிய பொழுது மழை பெய்துகொண்டிருந்தது. ''மழை பெய்யும் போதும் அமெரிக்கா அழகாகத்தான் விளங்குகிறது... நான் உங்கள் நாட்டிற்கு வருகை தந்ததின் நோக்கமே நீங்கள் கிறிஸ்துவைப் பின் செல்ல வேண்டும் என்று உங்களைத் தூண்டுவதற்கே...'' என்று தன் குறிக்கோளை முன் வைத்தார்.

ஒக்ரோபர் 2ஆம் நாள் நியூயோர்க் நகரில் 151 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகளின் 34வது பொது அமர்வில் உரையாற்றினார்.

14ஆண்டுகளுக்கு முன் திருத்தந்தை 6 ஆம் சின்னப்பர் அந்த அவையில் ''இனி ஒரு போதும் போர் என்பதே கூடாது...'' என்று கூறிய வார்த்தைகளைத் திரும்பக் கூறி வலியுறுத்தினார். அப்போ நடந்து கொண்டிருந்த ஈரான், ஈராக் போர்களை உடன் நிறுத்த அழைப்பு விடுத்தார். ''மனித உரிமைப் பிரகடனம்'' ஐக்கிய நாடுகளின் அடிப்படையாக வேண்டும் என்று தெளிவுறுத்தினார்.

உலகத்திலேயே மிகப்பெரிய மறை மாவட்டத்திற்குப்போகு முன் ஐக்கிய நாடுகள் அவையில் அவர் சொன்ன வசனங்கள் முக்கியமானவை.

(வளரும்)

## யாழ் பொது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேயப் பணிகளை மக்களுக்கு ஆற்றும்படி கேட்டுக் கொண்டார்.

திருப்பலி முடிவில் உரையாற்றிய சபையின் இயக்குனர் அருள்திரு செல்வராஜா, இச்சபையின் தலைவர் திரு எல்.சி. நீக்கிலஸ் அவர்களின் ஊக்குவிப்பால் பல இளைஞர்களும் சேர்ந்துள்ளார்கள் என்று பாராட்டினார்.

## நவாலியூர்...

(1ஆம் பக்கத தொடர்ச்சி)

வசைவுகளையும் ஒருமுகப் படுத்தி இளம் கலைஞர்கள் யோன்சன், கெனற் யேரியன், சாம் போன்றவர்களால் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

நாவாயூர் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்துக்கு நாடகத்தின் விழுமியங்களையும், புனிதத்துவத்தையும் உணர்

## 2ஆம் வருட நினைவு



திரு. யோண் பிலிப்
(மலாயன் பென்சனர்)

மலர்வு 04.10.1909
உதிர்வு 26.10.1993

''சீவியத்தில் நேசித்தவரை மரணத்திலும் மறவாதிருப்போமாக.''

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ். அருள் ஆச்சிரமத்தில் 26. 10. 1995 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இப்பலியில் பங்குபற்றி அன்னாரின் ஆன்மசாந்திக்காக செபிக்குமாறு அன்பு நெஞ்சங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்.
243, மருத்துவமனைசாலை
யாழ்ப்பாணம்.

A/43/95

## 31ஆம் நாள் நினைவு



திரு தமியாம்பிள்ளை
பாக்கியநாதர்
(புனித தோமையார் ஆலய முன்னைநாள் சங்கிலிஸ்தாம்)

மண்ணில் 1910.4.9
விண்ணில் 1995.9.20

மதுரமான யேசுவே! மரண பாக்கியமடைந்த உமது அடியான் பாக்கியநாதருக்கு முடிவில்லாத பேரின்ப பாக்கியத்தை அளித்தருள வேண்டுகின்றோம்.

திருப்பலி 20. 10. 1995 காலை 6. 00 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரை இழந்து நிற்கும்
மனைவி, மக்கள், உறவினர்.
பருத்தித்துறை

A/40/95

## நிங்கா நினைவில் 31 ஆம் நாள்



செல்வி அல்போன்ஸ் அமலவிஜி
(நாகர் கோவில் வித்தியாலய மாணவி)

''விசுவாசிகளுக்கு வாழ்வு
மாறுபடுவதேயன்றி
அழிக்கப்படுவதில்லை''

கள்ளமற்ற அன்புள்ளம்
கருணை நிறை திருவதனம்
எல்லோருக்கும் நல்லவளாய்,
இனியவளாய் இருந்தாயே!
கல்வி கற்றுவந்துவிடுவேன்
என்று சொல்லி சென்றாயே
எம் அமலவிஜியே!
பள்ளியிலே வீழ்ந்த குண்டினால்
நிலையான வாழ்வு தேடி
நீங்கிச் சென்றாயே இறைவனடி!

இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற வரம் வேண்டி நாகர்கோவில் புனித சவேரியார் ஆலயத்தில் 22-10-95 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு இரங்கல் பலி ஒப்புக்கொடுக்கப்படும்,

பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்காமார், அண்ணா, உற்றார், உறவினர்.
நாகர்கோவில்,

A/42/95

## 31ஆம் நாள் நினைவும் நன்றிநவிலலும்



லூயிஸ் கிறேஷயன்
(இளைப்பாறிய புவியியல் ஆசிரியர்)

பிறப்பு 16-04-1917
இறப்பு 06-09-1995

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 06-10-1995 வெள்ளிக்கிழமை காலை 6.45 மணிக்கு குருநகர் புதிய யாகப்பர் ஆலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதை அறியத்தருவதுடன்,

அன்னாரின் மரணச்சடங்கில் நேரில் வந்து கலந்து கொண்டு எமது துயரில் பங்கு பற்றியவர்களுக்கும், பற்பல வழிகளில் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

A/41/95

# நேர் காணல் > செல்வி வயலற் இம்மனுவேல்



யாழ். மறை மாவட்ட மரியாயின் சேனை தலைமைச் சபையின் (கொமிற்சியம்) தலைவராக ஆறுவருடங்கள் பணிபுரிந்தவரும், தற்போது அதன் செயலாளரும் உளவளத்துணையின் பகுதி நேர ஆலோசகரும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட ஆசிரியையுமான செல்வி வயலற் இம்மனுவேல் அவர்களுடன் ஓர் நேர்காணல்.

திரு. ரூபன் மரியராஜன்

● **மரியாயின் சேனையின் பணிபற்றி குறிப்பிடுங்கள்?**

மரியாயின் சேனை இலங்கையிலேயே யாழ் மறை மாவட்டத்திலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்டது. பொதுநிலையினரை அப்போஸ்தல பணிக்கு ஈடுபடுத்துவதற்காகவே மரியாயின் சேனை அமைக்கப்பட்டது. குறிப்பாக பங்கு மக்களுக்கும்– பங்குத்தந்தைக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துதல், வழிபாடுகளை நடாத்துதல், வைத்தியசாலைகளில் இல்லங்களில் நோயாளரை, வயோதிபரைத் தரிசித்தல் போன்ற செயற்பாடுகள். அதிகமான பங்குகளில் மறைக்கல்வியை கற்பித்தல், ஊக்குவித்தல், இவ்வாறாக பல ஆன்மீகப்பணிகளை மேற்கொள்கிறது.

● **தற்போதைய நிலையில் மரியாயின்சேனை பணி எப்படி அமைந்துள்ளது?**

இடம் பெயர்ந்துள்ள மக்களில் பலர் தாம் தங்கியுள்ள பகுதி பங்குகளில் மரியாயின் சேனையில் சேர்ந்துள்ளனர். ஆனால் முன்னர்போல இளம் வயதினர் இதில் சேர்வதில் ஆர்வம் இல்லை. போர்க்கால சூழல், ரியூஷன் போன்ற காரணங்கள் என்றே கூறவேண்டும். 40 வயதுக்கு மேற்பட்டவர்களே இணைகிறார்கள். சகலரும் இணையவேண்டும். முன்னர் யாழ்ப்பாணத்தில் ஞான ஒடுக்கம், விழாக்கள் பெரிய கூட்டம் நடைபெறும்போது பங்கு மட்டத்தில் இருந்து வருவார்கள். ஆனால் போக்குவரவு பிரச்சினையால் அவை நடைபெறுவதில்லை. அவர்களுடன் தொடர்புகள் இல்லை, தரிசிப்பு இல்லை.

● **பங்குகள் மட்டத்தில் அதன் செயற்பாடுகள்?**

இன்று பல பங்குகளில் மரியாயின் சேனை இல்லை. அதனை வழிநடாத்தக் கூடியவர்களும் அனுபவம் உடையவர்களும் இல்லாததே காரணம் எனலாம். அத்துடன் பங்குக் குருமார் இதில் கூடிய ஆர்வம் காட்டினால் அதனை வளர்க்கலாம்.

● **உளவளத்துணையில் தங்களின் பணி?**

இங்கு ஆறு மாத பயிற்சியின் பின்னர் பகுதிநேர ஆலோசகராக பணிபுரிகிறேன். போர்ச்சூழல், குடும்பப்பிரச்சினை, உணர்ச்சியின் தாக்கம் போன்று பல்வேறு காரணங்களால் மனம் நொந்துபோனவர்களுடன் உரையாடி அவர்களின் மனக்குறைகளை, மனவேதனைகளைத் தீர்க்க முடிகிறது.

● **பாதுகாவலன் வாசகர்களுக்கு கூறுவது?**

முன்னர் பல்வேறு ஆன்மீக சஞ்சிகைகள், பத்திரிகைகள் இங்கு வந்தன- ஆனால் நாட்டு நிலைமைகளால் அவை வருவதில்லை. யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க பத்திரிகையான பாதுகாவலனை சகலரும் வாசிக்கவேண்டும். திருச்சபையில் என்ன நடைபெறுகிறது என்பதே சிலருக்கு தெரியாது. பங்கு மட்டத்தில் வாசகர் வட்டம், நூலகம் மூலம் சகலரையும் பாதுகாவலன் வாசிக்க ஏற்பாடு செய்யலாம். அத்துடன் பாதுகாவலனுக்கு பலரை எழுதத்தூண்டவேண்டும். அதில் வரும் ஆக்கங்கள் எல்லோரும் விளங்கக் கூடியதாக வெளிவரவேண்டும்.

★ ★ ★

செல்வி வயலற் இம்மனுவேல் 40 வருடகாலம் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஆசிரியராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியையாக அங்கு பணிபுரிகிறார். அத்துடன் மொழிபெயர்ப்பு வேலைகளிலும் ஈடுபட்டுவருகிறார்.

---

## புனித பத்திரிசியார்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கையின் தேசிய குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி புரிய முன், ஊர்காவற்றுறை அச்சுவேலிப்பங்குகளிலும், புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பணியாற்றினார்.

1982இல் இங்கிலாந்து சென்று கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணிப்பட்டப் படிப்பை முடித்து, 1989இல் தாய்நாடு திரும்பிய இவர் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். பின் 01-07-1992இல் கல்லூரி அதிபராகப் பணியேற்றார்.

அதிபர் தந்தையவர்களிடம் காணக்கூடிய உயரிய நோக்கும், சீரிய முன்னோக்கிய சிந்தனையாற்றலும், ஆழமான அறிவும், அவரை ஈழத்தின் கல்விச் சமூகத்தில் மட்டுமன்று, ஏனைய சமூக மட்டங்களிலும் சிறப்படையவைத்திருக்கின்றது என்று கூறினால் மிகையாகாது.

அவரது பணி சிறக்க வேண்டும்; மேலும் பல்லாண்டுகள் ஆன்ம, உடல் நலத்துடன் வாழ்ந்து, எம் மண்ணிற்கும், மக்களுக்கும் சேவை செய்யவேண்டும் என வாழ்த்தி இறையாசீர் வேண்டி நிற்கின்றோம்.

---

திருத்தந்தையின் 68 வது திருப்பயணம்

# ஜனநாயகத்தின் வெற்றி தோல்வி அதன் உண்மைகளைப் பொறுத்ததே!

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் தமது 68வது ஐந்து நாள் வெளிநாட்டுத் திருப்பயணத்தை அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு கடந்த புதன்கிழமை 4-10-95 அன்று ஆரம்பித்தார். இது அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கான ஐந்தாவது திருப்பயணம். இரு ஆண்டுகளுக்குமுன் 'டென்வர்' எனுமிடத்தில் நடந்த உலக இளைஞர் மகாநாட்டிற்காக அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு விஜயம் செய்திருந்தார் திருத்தந்தை.

கடந்தவாரம்மேற்கொண்ட விஜயம் ஐ. நா. நிறுவனத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி மேற்கொள்ளப்பட்டது. வியாழன் 05-10-95இல் ஐ. நா. பொதுச் சபை அமர்வில் திருத்தந்தை உரையாற்றினார். (பார்க்க பக். 6). சனிக்கிழமை அன்று நியூயோர்க்கிலுள்ள ஐ. நாவுக்கான திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் இல்லத்தின் புதிய அலுவலகங்களை மந்திரித்தார் திருத்தந்தை — 1964 ஆம் ஆண்டு முதல் திருப்பீடம் நிரந்தரப் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்று செயற்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது.

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் தனது 5 நாள் அமெரிக்க ஐக்கிய நாட்டுத் திருப்பயணத்தை முடித்துக்கொண்டு, பல்ரிமோர் வாஷிங்ரனிலுள்ள சர்வதேச விமானத் தளத்திலிருந்து ஞாயிறு மாலை றோம் புறப்படு முன் அமெரிக்க மக்களுக்கு தனது இறுதியுரையை ஆற்றினார்.

''ஜன நாயக முன்னேற்றத்தின் எடுத்துக்காட்டாக பலர் அமெரிக்க ஐக்கிய நாட்டை எதிர்நோக்குகின்றனர். எந்த ஜனநாயகமும் அது கொண்டிருக்கும், மற்றும் ஊக்கமளிக்கும் உண்மைகளைப் பொறுத்தே வெற்றியோ தோல்வியோ அடைகின்றது என்று கூறிய திருத்தந்தை, சமூக மற்றும் பொது வாழ்வில் பொது நலன்களை நோக்கமாகக் கொண்டு மனித மாண்பையும் உரிமைகளையும் பாதுகாக்கவும், நியாயமானதற்காக சேவை செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

## சுதந்திரத்துக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும்போது வன்முறையும் திகிலும் தலை தூக்குகின்றது என்று மேலும் பாப்பிறை கூறினார்.

(திருத்தந்தையின் உரையின் சுருக்கத்திற்கு பார்க்க பக்கம் 6)

40 நிமிடங்களுக்கு நீடித்த இவ்வுரையின் பல்வேறு பகுதிகளை ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்சியம், ஸ்பானியம் ஆகிய மொழிகளில் வழங்கிய திருத்தந்தை, இறுதியில் அராபிய மற்றும் சீன மொழிகளிலும் தனது நல்லாசிகளைத் தெரிவித்தார்.

பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பர் இதற்கு முன்னர் ஐ. நா. சபையில் 1979 இலும், பாப்பரசர் 6-ம் சின்னப்பர் 1965 இலும் உரையாற்றியது குறிப்பிடத்தக்கது.

ஐ. நா. எனும் பன்னாட்டு நிறுவனம் உலக சமாதானம், பாதுகாப்பு, நாடுகளிடையே நட்புறவை வளர்த்தல், நோய் எழுத்தறிவின்மையை நீக்குதல், அரசியல் சமூக பொருளாதார நிலையில் ஒத்துழைப்பு இவற்றிற்காக உழைப்பதற்கு சுயவிருப்பத்துடன் ஒன்றிணைந்த நாடுகளின் அமைப்பாகும்.

இந்நிறுவனம் 1945-ம் ஆண்டு ஒக்ரோபர் 24-ம் திகதி முதல் செயற்படத் தொடங்கியது. இன்னும், அரபு, ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷியம், ஸ்பானியம் ஆகியவை இந்நிறுவனத்தின் மொழிகளாகும்.

இதன் தலைமையகம் ஐக்கிய அமெரிக்க நாட்டிலுள்ள நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது. அமைதியை விரும்பும் எந்த நாடும் இதன் உறுப்பினராகலாம். இதுவரை 185 நாடுகள் இதன் அங்கத்தவராயுள்ளன. அமைதி விருதுகளைப் பெற்றுள்ள 20 ஆயிரம் நேயர்கள் தற்சமயம் இதன் 16 பணித்தளங்களில் பணியாற்றி வருகிஸ்றனர்.

# சிறீலங்காவில் 'அசிபா' பட்டறை

கண்டி, லெவல்லையிலுள்ள பத்திமா தியான இல்லத்தில் ஒக்ரோபர் 2 ஆம் நாள் தொடக்கம் 12ஆம் நாள் வரை இடம்பெறும் '' ஆசிபா '' (Asipa: Asian Integral Pastoral Action-பார்க்க பக்கம் 6) பட்டறைகளில் யாழ். மறை மாவட்டக் குருக்களான அருள் தந்தையர் P. இருதயதாஸ், R. ஸ்ரலின், P. யேசுரத்தினம், M. D. V. றவிச்சந்திரன், G. யோன் லொறற் ஆகிய ஐவரும் பங்கு பற்றுகின்றனர்.

ஆசிய ஆயர் மன்றப் பொது நிலையினர் செயலகத்தில் பணிபுரியும் அருள்திரு ஓஸ்வால்ட் கர்மர், இந்தியா - நக்பூரைச் சேர்ந்த அருள்திரு தோமஸ் லியே, மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த திருமதி எஸ்ரேலா படிலா ஆகியோரால் நெறிப்படுத்தப்படும் இப் பட்டறையில் 4 ஆயர்கள், 37 குருக்கள், 3 கன்னியர், 10 பொது நிலையினர் பங்கு பற்றுகின்றனர்.

---

## குருத்துவக் கல்லூரி 16வது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் S. J. இம்மானுவேல் அடிகளார் சென்ற கல்வியாண்டிற்கான அறிக்கையை வாசித்தளித்தார். அதனைத் தொடர்ந்து கல்வியில் திறமைச்சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், நற்சான்றிதழ்களும் ஆயரினால் வழங்கப்பட்டன. அண்மையில் உரோமை ஊர்பான் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு இக்கல்லூரியின் மெய்யியல் மற்றும் இறையியல் துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் முதல் தடவையாக தமது மெய்யியற்துறைக்கான இளங்கலை மாணிப்பட்டத்தையும் (B. Ph., Rome), இறையியற்துறைக்கான இளங்கலைமாணிப்பட்டத்தையும் (B. Th., Rome) பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. ஆயரின் சிறப்புரையைத் தொடர்ந்து அருள் தந்தை C. G. ஜெயக்குமார் அடிகள் ''சமூக உருநிலைமாற்றம்- போரும் திருச்சபையும்'' (Social Transformation-War and Church) என்ற தலைப்பில் சிறப்பு விரிவுரை (ஆங்கிலத்தில்) நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து இச்சொற்பொழிவு பற்றிய கருத்துப்பரிமாற்றம் இடம் பெற்றது. பின்னர் மாணவத் தலைவர் நன்றியுரை நிகழ்த்தினார்.

(நேசன்)

---

## மானிப்பாய்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நன்றி கூறும் முகமாக, 03-10-95 செவ்வாய்க்கிழமை தமது பிறப்பிடமாகிய மானிப்பாய் பங்கிலுள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

## நாகர்கோவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தின் அராஜகத்தினால் முப்பத்தி நான்கு (34) பேரைப் பறிகொடுத்தும், நூற்றி ஐந்து (105) பேர் காயமடைந்தும் இருந்த நிலையில், தாளையடிப் பங்குத்தந்தை மூலம் உதவி கேட்டு விண்ணப்பித்த நாகர் கோவில் மக்களின் குரலுக்கு உடனே செவிமடுத்து, அவர்களுக்கு வேண்டிய உலர் உணவு அங்குள்ள அருட் சகோதரர் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.